வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 29.01.2024 திங்கட்கிழமை | இதழ் : 29 | பக்கங்கள் : 12

# வீடு சின்னம் பொதுச் சின்னமானால் மீண்டும் தமிழ் தேசிய கூட்டமைப்பு!

## தமிழ் அரசு கட்சிக்கு முன்னாள் பங்காளிகள் பதில்!

### தமிழ் தேசிய கூட்டமைப்பு பதிவு செய்யப்பட வேண்டும்! கூட்டுக்கு முன் தமிழ் அரசு பிளவை சரிசெய்யவேண்டும்!





**யாழ்ப்பாணம், ஜனவரி 29**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்பட வேண்டும், பொதுச் சின்னத்தை ஏற்க வேண்டும். அந்தப் பொதுச் சின்னம் வீடு சின்னமாகவும் இருக்கலாம். இவற்றை ஏற்றால் இலங்கை தமிழ் அரசு கட்சியுடன் இணைந்து மீளவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயல்படமுடியும். எனினும், மீண்டும் ஒற்றை தலைமையின் கீழும் ஒன்றிணைய முடியாது.**

இவ்வாறு முன்னாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளும் - தற்போது ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற பெயரில் இயங்கி வரும் கட்சிகளான புளொட், ரெலோ, ஈ. பி. ஆர். எல். எவ். ஆகியவை தெரிவித்துள்ளன.

அத்துடன், இலங்கை தமிழ் அரசு கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிளவு சரி செய்யப்பட வேண்டும் என்றும் அந்தக் கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட சி. சிறீதரன் 2009 ஆம் ஆண்டுக்கு முன்னையது போன்று மீண்டும்

11

## இனப் படுகொலைகளை இஸ்ரேல் தடுக்க வேண்டும்!

### சர்வதேச நீதிமன்றம் உத்தரவு

*காஸா போரை நிறுத்த உத்தரவிடவில்லை*

*கேப்டவுன், ஜன. 29*

காஸாவில் இனப்படுகொலைகள் இடம்பெறுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை இஸ்ரேல் எடுக்க வேண்டும் என சர்வதேச நீதிமன்றம் (ஐ. சி. சி) உத்தரவிட்டுள்ளது.

எனினும், தென்னாபிரிக்கா வேண்டுகோள் விடுத்தபடி இஸ்ரேல் காஸாவில் தனது

11

## சர்வதேச நீதிமன்று தொடர்பான எதிர்பார்ப்புகள் அர்த்தமற்றவை

### அமைச்சர் டக்ளஸ் சொல்கிறார்

*யாழ்ப்பாணம், ஜன. 29*

தமிழ் அரசியல் தரப்புகளால் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்படும் சர்வதேச நீதிமன்றம் தொடர்பான எதிர்பார்ப்புகள் அர்த்தமற்றவை என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது - இவ்வாறு கூறியுள்ளார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

காஸா மீது இஸ்ரேல் தொடுத்துள்ள போரை

11

## சொத்து விவரத்தை சமர்ப்பிக்க காலக்கெடு

*கொழும்பு, ஜன. 29*

ஜனாதிபதி, பிரதமர், மக்கள் பிரதிநிதிகள், அரச ஊழியர்கள் மற்றும் பல முக்கிய பிரமுகர்களின் சொத்துப் பட்டியல்களை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடுவை நிர்ணயித்து

11

## தமிழ் அரசின் புதிய நிர்வாகத்தை கிடப்பில் வைத்திருக்க தீர்மானம்!

### மாவை - சிறீதரன் கூட்டாக எடுத்தனர்

*கொழும்பு, ஜன. 29*

இலங்கை தமிழ் அரசு கட்சிக்கு திருகோணமலையில் வைத்துத் தெரிவுசெய்யப்பட்ட புதிய நிர்வாகத்தை கிடப்பில் வைத்திருக்கவும் - இது தொடர்பான இறுதித் தீர்மானங்களை எடுப்பதைப் பிற்போடவும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைமை முடிவு செய்துள்ளது.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவின் வீட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை எடுக்கப்பட்ட கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தமிழ் அரசு கட்சியின் புதிய தலைவராக அண்மையில் தெரிவான

11

## இலங்கை கிரிக்கெட் மீதான தடையை நீக்கியது ஐ. சி. சி!

*டுபாய், ஜன. 29*

இலங்கை கிரிக்கெட் சபை மீதான தற்காலிக தடையை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ. சி. சி.) நீக்கியுள்ளது. உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இந்தத் தடை நீக்கப்படுவதாக நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியான ஐ. சி. சியின் அறிக்கை தெரிவித்தது.

இலங்கை கிரிக்கெட் சபையின் நிர்வாகத்தில் அரசியல் தலையீடுகள் நிலவுகின்றன என்று

11

## கொக்கட்டிச்சோலை படுகொலை 37ஆவது ஆண்டு நினைவேந்தல்!

*மட்டக்களப்பு, ஜன. 29*

கொக்கட்டிச் சோலையில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 37ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதன்போது மகிழடித்தீவில் அமைக்கப்பட்டுள்ள நினைவு தூபியில் அரசியல் கட்சிகளின் பிரதி நிதிகள் மற்றும் பொதுமக்கள் நினைவேந்தனர்.

1987 ஜனவரி 28 ஆம் திகதி கொக்கட்டிச்சே சாலை பிரதேசத்தை சுற்றிவளைத்த இராணுவத்தினர் அங்கிருந்த அப்பாவி பொதுமக்கள் 152 பேரை கைது செய்ததுடன், அவர்களை சுட்டுப் படு கொலை செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## நாகபட்டினம் - காங்கேசன்துறை படகு சேவை பெப். - 15 ஆரம்பம்!

### துறைசார் அமைச்சர் நிமால் அறிவிப்பு

*கொழும்பு, ஜன. 29*

தமிழ்நாட்டின் நாகப்பட்டினம் மற்றும் காங்கேசன்துறை இடையே பயணிகள் படகு சேவை எதிர்வரும் பெப். 15ஆம் திகதி தொடங்கப்படும் என்று துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறீபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பெப்ரவரி 15ஆம் திகதி சேவைகளை மீண்டும் தொடங்க இந்திய அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. எனவே, சேவையைத் தொடங்குவதற்கான ஆரம்ப திட்டங்கள் நிறைவடைந்துள்ளன - என்றும் அவர் தெரிவித்தார்.

நாகபட்டினம் - காங்கேசன்துறை இடையிலான படகு சேவை கடந்த ஒக்ரோபர் 20ஆம் திகதி ஆரம்பமானது. செரியபாணி' பயணிகள் படகு காங்கேசன்துறை துறைமுகத்தை

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

இரண்டாயிரத்துப் பதினைந்தாம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்து அம்பாந்தோட்டைக்கு விமானத்தில் சென்று இறங்கிய பின்னர் -

ஒரு சில மாதங்களிலேயே தன்னை சுதாகரித்துக்கொண்டு நாரஹேன்பிட்டி விகாரையில் வந்திறங்கி கூட்டங்களை நடத்தத் தொடங்கினார்.

அப்போதிருந்தே, அடுத்த தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராகக் களம் இறங்கும் முடிவை எடுத்த கோட்டாபய ராஜபக்ஷ தேர்தலுக்கான ஆயத்தப் பணிகளை ஆரம்பித்திருந்தார்.

தனக்கு நெருக்கமான புத்திஜீவிகள் குழு ஒன்றைத் தெரிவு செய்து, அவர்கள் மூலம் 'வியத்மக' என்ற அமைப்பை உருவாக்கினார். அந்த அமைப்பு கோட்டாபயவை முன்னிறுத்தி பிரசாரத்தை நடத்தியதுடன் அதில் வெற்றியும் பெற்றிருந்தது.

திட்டமிடலிலும் தேர்தல் பிரசாரத்திலும் மிகச்சிறப்பாக பணியாற்றிய கோட்டாவின் 'வியத்மக'வால் அவர் வெற்றி பெற்றபின்னர், அவரை வழிநடத்தவோ அல்லது அவருக்கு ஆலோசனை வழங்கவோ முடியவில்லையா அல்லது அவர்களின் ஆலோசனைகளை அவர் கேட்கவில்லையா என்பது தெரியவில்லை. அது இனி விமர்சிக்க வேண்டிய விவகாரமும் இல்லை.

ஆனால், அதே பாணியில் தனது ஜனாதிபதி கனவோடு களம் இறங்கிய பாட்டாலி சம்பிக்க ரணவக்க தனது முதலாவது பணியாக 42ஆவது படையணி என்ற பெயரில் அமைப்பு ஒன்றை நிறுவினார். அந்த அமைப்பு மிகப்பெரும் எடுப்பில் செயல்பட்டுவந்ததும் அவர் ஒவ்வொரு மாவட்டமாக சென்று பிரசாரத்தில் ஈடுபட்டதும் பழைய சங்கதிகள்.

இரண்டு நாட்கள் யாழ்ப்பாணத்திலும் முகாமிட்டு அவர் தனது படையணியின் பிரசாரத்தை நடத்தியிருந்தது டன் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துச் சென்றிருந்தார்.

பின்னர், தனக்கு ஓர் அரசியல் கட்சி தேவை என்பதை உணர்ந்துகொண்ட அவர் தனது பழைய ஜாதிக ஹெல உறுமய என்ற கட்சியையே சிறீலங்கா குடியரசு முன்னணி என்று பெயர் மாற்றி புதிய இரத்தம் பாய்ச்சியிருந்ததுடன் தொடர்ந்து அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான ஆயத்தங்களை செய்துகொண்டிருந்தார்.

அவரின் நோக்கம் எல்லாமே இரண்டாயிரத்துப் பதினைந்தாம் ஆண்டில் ராஜபக்ஷக்களை தோற்கடிப்பதற்காக ஒரு பொது வேட்பாளரைத் தேடிய போது மைத்திரி அகப்பட்டதுபோல, அடுத்த தேர்தலில் ரணில் - ராஜபக்ஷ கூட்டை எதிர்கொள்ள ஒரு பொது வேட்பாளர் தேவை என்ற நிலை வந்தால் தானே மற்றவர்கள் கண்ணுக்கு தெரிவேன் என்ற நம்பிக்கைதான்.

ஆனால், களநிலைமைகள் தற்போது தலைகீழாக மாறிவிட்டன. இப்போது ரணில் - சஜித் - அநுர என்று மும்முனைப் போட்டிக்கு நாடு தயாராகி வருவதாகத் தெரிகின்றது. அப்படி மும்முனைப் போட்டி நடைபெற்றால் யாருமே ஐம்பது சதவீத வாக்குகளைப் பெற முடியாது என்றே நம்பப்படுகின்றது. இந்த நிலையில் அதனை இரு முனைப் போட்டியாக மாற்றினால்தான் தாங்கள் விரும்புகின்ற ஒருவரை பதவியில் அமர்த்தமுடியும் என்ற நிலையில் சில வெளி சக்திகள் திட்டமிட்டு அதற்கான பணியில் ஈடுபட்டிருக்கின்றன என்கின்றன தெற்கு செய்திகள்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியும் அதனால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மன மாற்றமும் தேசிய மக்கள் சக்தியின்மீது மக்களின் பார்வை விழத்தொடங்கியதும் இப்போது அவர்கள் ஆட்சிக்கு வந்துவிடுவதற்கு ஒரு சிறிய 'ஓட்டை'யையும் விட்டு வைக்கக்கூடாது என்று பலரையும் சிந்திக்க வைத்திருக்கின்றது.

இலங்கையில் யார் ஆட்சிக்கு வரவேண்டும் என்பதைத் தீர்மானிப்பவர்களாக இருக்கின்ற அமெரிக்காவும் இந்தியாவும் எப்படியும் அவர்களுக்கு எதிராக ஒரு பொது வேட்பாளரைக் களமிறக்க முயன்று வருகின்றன என்று கூறப்படும் நிலையில் சம்பிக்க, அடுத்து என்ன நிலையெடுப்பது என்பதில் தடுமாற்றமடைந்திருக்கிறார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்த பின்னர் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறும்போது அவர் பலமான ஒரு கட்சியுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட வேண்டிய நிலையில் இருக்கிறார்.

இந்த நிலையில் அவர் கடந்த வாரம் மட்டக்களப்புக்கு சென்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டிருந்தார். அவரின் கட்சியில் இணைந்துள்ள மட்டக்களப்பைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் அவரை அங்கு அழைத்து கூட்டங்களை நடத்தியிருந்தனர்.

இவர் கட்சிக்கும் மட்டக்களப்பில் ஒரு சிலர் ஆதரவாக 'திரளுவதை' விரும்பாத சிலர் அவரின் கூட்டங்கள் நடைபெறும் இடத்துக்கு பஸ்களில் மக்களை கொண்டுவந்து ஆர்ப்பாட்டம் நடத்த முயன்றதான செய்தியை அறிந்தபோது நம்பமுடியவில்லை. மனுசன் என்னசெய்வது என்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்க இவர்களோ அவரைக் கண்டு பயப்பட்டிருக்கிறார்கள் என்றால், அவ்வாறு பயந்தவர்களும் தமது எதிர்காலம் குறித்துக் கொஞ்சம் தடுமாற்றத்துடன்தான் இருக்கின்றனர் போலும்.!

**- ஊர்க்குருவி.**

# புதிய கூட்டணியில் சேர்வதற்காக 28 கட்சிகள், 60 எம். பிக்கள் பேச்சு!

## நிமல் லான்சா எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 29

புதிய கூட்டணியில் இணைவதற்காக 28இற்கும் மேற்பட்ட கட்சிகளும் 60இற்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் எம்முடன் பேச்சு நடத்தி வருகின்றனர். ஜனநாயக ரீதியான அதிகாரத்தை ஒரு தலைவரிடம் அன்றி ஒரு தலைமைத்துவ சபைக்கு வழங்கும் வேலைத் திட்டத்தை எமது கூட்டணி முன்னெடுக்கும் எனப் புதிய கூட்டணியின் நிறுவுநரான பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்தார்.

புதிய கூட்டணியை அமைக்கும் நோக்கில் ஜாஎலவில் அவர் நடத்திய மக்கள் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றும்போதே நிமல் லான்சா மேற்கண்டவாறு கூறினார்.

பெருமளவிலான எம்.பிக்களையும், கட்சிகளையும் இணைத்து எதிர்காலத்தில் மிகப் பெரிய கூட்டணி உருவாக்கப்படும். வரலாற்றில் முதன்முறையாக கட்சி சின்னமோ, கட்சியோ இல்லாமல் ஒரு நிகழ்ச்சியை வெற்றி பெற செய்வதற்காக ஏராளமானோர் திரண்டுள்ளனர். தலைவரோ, தலைமைக் குழுவோ இல்லாமல் எமது அழைப்பை ஏற்று வந்துள்ள மக்களுக்கு எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

பொய்யான வாக்குறுதிகளை வழங்குவதற்காக இந்த கூட்டணி ஒன்று கூடவில்லை. பொருளாதார திட்டத்தை வலுப்படுத்தி நாட்டை மீட்டெடுக்கவே கூடியுள்ளது. இதுவரை வந்த அரசியல் பயணம் கடந்த இரண்டு வருடங்களில் பின்னோக்கி சென்றுள்ளது. கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த சிறிது காலத்திலேயே 30 வருட அரசியல் பின்னோக்கி சென்றுள்ளது. கற்ற சிலர் அவரை சூழ்ந்து கொண்டு, முதல் பணியாக வரியைக் குறைக்க ஆலோசனை வழங்கினர். இந்த ஆலோசனையை வழங்கியவர் நாலக கொடஹேவா. இப்போது அவர் சஜித்துக்கு அறிவுரை வழங்குகிறார்.

மக்களுக்கு உண்மையை எடுத்துரைப்பதற்காகவே இந்த பணியை ஆரம்பித்துள்ளோம். மக்களுக்கு யதார்த்தத்தை சொல்ல, வருமானம்



மற்றும் செலவு என்றால் என்ன? வருமானத்தைப் பெருக்கி, செலவுகளைக் குறைக்கும் முறையைக் கூற வேண்டும். இதைப் பற்றி அரசியல்வாதிகள் மேடைகளில் பேசுவதில்லை. மக்களுக்கு உண்மையையும், யதார்த்தத்தையும் புரிய வைக்க இந்தப் புதிய கூட்டணி முடிவு செய்துள்ளது.

இந்தக் கூட்டணிக்கு ஒரு தலைவர், கட்சி, சின்னம் இல்லாவிட்டாலும் பாராளுமன்றத்தில் அதிக எண்ணிக்கையிலான எம்.பிக்களும், அதிக எண்ணிக்கையிலான கட்சிகளும் சேர்க்கப்பட்டு மிகப்பெரிய கூட்டணி உருவாக்கப்படும்.

ஜனாதிபதி 14 மாதங்களில் 14 தடவைகள் வெளிநாடுகளுக்கு சென்றாரென அநுர குமார குறிப்பிடுகின்றார். நாட்டை மீட்பதற்கு சர்வதேசத்தின் உதவியைக் கோருவதற்கு சர்வதேச நாடுகளுக்குச் செல்ல வேண்டியவர் செல்ல வேண்டும். அநுர குமாரவால் ஏனைய ஜனாதிபதிகளைப் போன்று சர்வதேச நாடுகளுக்குச் சென்று பணியாற்ற முடியாது. சர்வதேச நாணய நிதியம் வந்ததும் பயந்து ஒளிந்து கொண்டார்.

உலகுக்குப் புதிய தொழில்நுட்பத்துடன் செல்லும் தலைவர் தேவை. அவ்வாறின்றி ஏழ்மை மனப்பான்மை கொண்ட, கிணற்றுத் தவளை மனநிலையுடன் செயல்படும் ஊமை கதாபாத்திரங்கள் தேவையில்லை. அநுரகுமார கூட்டத்தை நடத்திய மைதானமே இது. அன்றைய தினத்திலும் பார்க்க இன்று அதிகமான மக்கள் இங்கு வந்துள்ளனர். 22 மாவட்டங்கள் மற்றும் 160 தொகுதிகளில் எமது திட்டத்தை முன்னெடுத்துச் செல்வோம்.

இலங்கை முழுவதிலும் உள்ள பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், தொழில்சங்கங்கள், ஏனைய கட்சிகளின் தொழில்சங்கங்கள் எம்முடன் இணைந்து கொள்ளவுள்ளன. இது ஓர் ஒத்திகை மாத்திரமே. அனைத்துக் கட்சிகளுடனும், அனைத்து எம்.பிக்களுடனும் பேசி, துணைத் திட்டத்தை தயாரித்துள்ளோம். எனவே, அச்சமின்றி ஒன்றுபடுங்கள், பொய்யர்களும், தற்பெருமையாளர்களாலும் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

இந்த புதிய கூட்டணிக்காக 28 இற்கும் மேற்பட்ட கட்சிகளும், 60 இற்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் எம்முடன் பேச்சு நடத்தி வருகின்றனர். இலங்கையில் மிகப் பெரிய கூட்டணியை உருவாக்கி, அதிக எண்ணிக்கையிலான எம்.பிக்கள் கொண்ட ஒவ்வோர் ஆசனத்திலும் மக்களை அணி திரளச் செய்து, ஜனநாயக ரீதியான ஒரு அதிகாரத்தை, ஒரு தலைவரிடம் அன்றி ஒரு தலைமைத்துவ சபைக்கு வழங்க முடியும் - என்றார். (ஐ)

## மாலைதீவு கடலில் 13 இலங்கையர் கைது!

கொழும்பு, ஜன. 29

மாலைதீவு கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 13 இலங்கையர்களை அந்த நாட்டு கரையோர பாதுகாப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

அத்துடன், அவர்களுக்கு சொந்தமான இரு மீன்பிடி படகுகளும் கைப்பற்றப்பட்டன. இந்தச் சம்பவம் கடந்த 25ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. (ஐ)

## பெரமுன உறுப்பினரை தாக்கியவர் கைதானார்

கொழும்பு, ஜன. 29

பொதுஜன பெரமுனவின் மகியங்கனை உள்ளூராட்சி சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவரை தாக்கி பலத்த காயம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

தாக்கப்பட்ட முன்னாள் உறுப்பினர் பதுளை பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

கந்தகெட்டிய, பதுலுஓயா பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

வீதியில் பயணித்துக் கொண்டிருந்த பெரமுன உறுப்பினரை வழிமறித்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## கடத்தப்பட்ட மீனவர்களை மீட்க இந்தியா உதவுகிறது

### கடற்படை தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 29

சோமாலிய கடற்கொள்ளையர்களால் படகுடன் கடத்திச் செல்லப்பட்ட ஆறு இலங்கை மீனவர்களையும் மீட்பதற்கு இந்தியா உதவுவதாக உறுதியளித்துள்ளதாகக் கடற்படையின் செய்தித் தொடர்பாளர் கயான் விக்கிரமசூரிய நேற்று ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

இதேவேளை, சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்திச் செல்லப்பட்ட மீனவர்களை கடற்றொழில் அமைச்சுடன் தொடர்பு கொள்ள கடற் கொள்ளையர்கள் அனுமதித்துள்ளதாக மீன்பிடி இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்துள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
29.01.2024 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், தை 15

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்திய திட்டங்களின் முக்கியத்துவம்

இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து இந்தியா பெரியளவில் உதவிகளை வழங்கியது. அவ்வாறு உதவி வழங்கிய ஒரேயொரு நாடு இந்தியா மட்டும்தான். இந்தியா தொடர்ந்தும் உதவிகளை வழங்கிவருகின்றது. இதன் தொடர்ச்சியாகப் பெரும் அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுப்பதில் ஆர்வம் கொண்டிருக்கின்றது. பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து மின்சாரக் கட்டணங்களின் அதிகரிப்பால் மக்கள் பெரியளவில் பிரச்னைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இதனை நிவர்த்தி செய்யும் வகையில் கொச்சியில் இருந்து கொழும்பு வரையில் திரவ எரிவாயு குழாய் அமைக்கும் திட்டம் ஒன்றை இந்தியா முன்னெடுத்து வருகின்றது. அண்மையில், நடைபெற்ற குடியரசு தின நிகழ்வின்போது இந்தியத் தூதுவர் இது தொடர்பான தகவல்களைத் தெரிவித்திருந்தார்.

ஏற்கனவே, இந்தியாவுக்கும் இலங்கைக்குமான படகு சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக மேற்குறிப்பிட்ட எரிவாயு குழாய் திட்டமும் முன்னெடுக்கப்படவுள்ளது. இதேபோன்று, இந்தியாவுக்கும் திருகோண மலைக்குமான எண்ணெய் குழாய் திட்டமும் முன்னெடுக்கப்படும். இது போன்ற திட்டங்களால் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களும் பெரியளவில் நன்மையடைவர். அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள் மத்தியில் போதிய புரிதல்கள் இருக்கின்றனவா என்று தெரியவில்லை. அனைத்தையும் அரசியல் கண்ணாடி கொண்டு நோக்கும் போக்கே காணப்படுகின்றது.

சில தினங்களுக்கு முன்னர், புதிய இந்தியத் தூதுவர் சம்பிராதயபூர்வமாக தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை சந்தித்திருந்தார். இதன்போதும், இந்தியாவால் முன்னெடுக்கப்பட்டுவரும் - எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள பொருளாதாரத் திட்டங்கள் தொடர்பில் பேசியிருக்கின்றார். ஆனால், தமிழ்க் கட்சிகளின் தலைவர்களில் ஒருவர் அரசியல் பிரச்னைதான் முக்கியமானது - முதலில் அதனைத்தான் கவனிக்க வேண்டும் என்றவாறு குறிப்பிட்டிருக்கின்றார். அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் முக்கியமானவைதான். ஆனால், அதற்கு சமாந்தரமாக அபிவிருத்தி திட்டங்களும் முக்கியமானது என்றவாறு தூதுவர் பதிலளித்திருக்கின்றார்.

இந்தியாவிடம் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான கோரிக்கைகளையும் தமிழ் கட்சிகள் முன்வைக்க வேண்டும். வடக்கு - கிழக்கில் இந்தியாவின் திட்டங்கள் பெரியளவில் இடம்பெறுவதால் தமிழ் மக்களே நன்மையடைவர். இந்த யத் திட்டங்களின் மூலம் நன்மை அடைவதற்கான திட்டங்களையும் தமிழ்க் கட்சிகள்தான் வகுக்க வேண்டும். எப்போதும் மற்றவர்களைக் குற்றஞ் சாட்டிக் கொண்டு இருப்பதால் விடயங்களை வெற்றிகொள்ள முடியாது. இறுதியில் அரசியல் பிரச்னைகளுக்கான தீர்வும் இல்லை - அபிவிருத்திக்கான வாய்ப்புகளும் இல்லை என்றவாறான நிலைமையே ஏற்படும். இதுவரையில் அவ்வாறான அனுபவங்கள்தான் தமிழ் மக்களுக்குக் கிடைத்திருக்கின்றன.

புலம்பெயர் சமூகமும் இந்தியாவில் நிறுவனங்களை உருவாக்கி அதன் ஊடாக முதலீடுகளை மேற்கொள்வது பற்றி சிந்திக்க வேண்டும். ஏனெனில், இந்தியாவின் ஊடாக முதலீடுகளை மேற்கொள்ளும்போது, முதலீடுகளுக்கான பாதுகாப்பு தொடர்பில் அச்சம் கொள்ள வேண்டியதில்லை. அதற்காக, அரசியல் விடயங்களைக் கைவிடுவது என்பதல்ல பொருள். அதற்கான கோரிக்கைகளை முன்னெடுக்கும் அதேவேளை, வடக்கு - கிழக்கில் அபிவிருத்திக்கான வாய்ப்புகளையும் தேட வேண்டும்.

வடக்கு - கிழக்கில் இந்தியாவின் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்போது மட்டும்தான் தமிழ் மக்கள் நன்மையடைவர். இதேவேளை, அந்தத் திட்டங்களால் தமிழ் மக்களுக்குப் பாதகமான விடயங்களும் ஏற்படாது. உதாரணமாக, திருகோணமலை சம்பூரில் ஆரம்பத்தில் அனல்மின் நிலையம் ஒன்றை நிறுவுவது தொடர்பிலேயே கலந்துரையாடப்பட்டது. எனினும் சுற்றுச் சூழல் கரிசனைகள் ஏற்பட்ட போது, அப்பகுதியில் வாழும் தமிழ் மக்கள் அச்சமடைந்தபோது இந்தியா அந்தத் திட்டத்தை மாற்றிக்கொண்டது. காற்றாலை திட்டத்துக்கு மாறியது.

ஆனால், இதுவே சீனாவின் திட்டமாக இருந்தால் தமிழ் மக்களின் கரிசனைகள் ஒரு பொருட்டாகவே இருந்திருக்காது - ஏனெனில், சீனா ஜனநாயக குரல்களை மதிக்காது. இதுதான் இந்தியாவின் திட்டங்களுக்கும் சீனாவின் திட்டங்களுக்கும் உள்ள அடிப்படையான வேறுபாடு. உதாரணமாக நுரைச்சோலை அனல் மின்நிலைய திட்டம் அந்தப் பகுதி மக்களால் எதிர்க்கப்பட்டது - சுற்றுச்சூழலியல் ஆர்வலர்கள் எதிர்ப்பு வெளியிட்டனர் - என்ன நடந்தது? திட்டத்தை சீனா கைவிட்டதா - இல்லையே!

இதுதான் சீனாவின் திட்டங்களுக்கும் இந்தியாவின் திட்டங்களுக்குமுள்ள வித்தியாசம். இந்தப் பின்புலத்தில்தான் இந்தியாவின் திட்டங்கள் வடக்கு - கிழக்கு நோக்கி அதிகம் வரவேண்டியது அவசியமாகின்றது.

# கிளிநொச்சி மருத்துவமனையில் கட்டிலின்றி நோயாளர்கள் சிரமம்!

*கிளிநொச்சி, ஜன. 29*

கிளிநொச்சி பொது மருத்துவமனை விடுதிகளில் நோயாளர்கள் நிரம்பி வழிகின்றது. இந்த நிலையில், நோயாளர்கள் எந்த வசதிகளும் இன்றி தரையில் படுத்து உறங்குகின்றனர். அத்துடன், பல வகையிலும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்றும் தெரிய வருகின்றது.

அதிகரித்து வரும் நோய் மற்றும் நாட்டில் நிலவும் மருந்து தட்டுப்பாடுகளால் அரச மருத்துவமனைகளுக்கு சிகிச்சை பெற வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், கிளிநொச்சி மருத்துவமனையிலும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

நோயாளர்களின் நலன் கருதி இது விடயத்தில் அதிகாரிகள் அக்கறை செலுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# வடமராட்சி கிழக்கு கரையில் இறந்து ஒதுங்கும் ஆமைகள்!

*வடமராட்சி, ஜன. 29*

வடமராட்சி கிழக்கு கடற்கரையில் கடந்த சில நாட்களாக ஆமைகள் இறந்து கரையொதுங்கி வருகின்றன. இந்த நிலையில், வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில் நேற்றுக் காலை மூன்று ஆமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன.

கடல் சீற்றம் காரணமாக கடல் கொந்தளிப்பாக காணப்படுவதால் காயமடைந்த ஆமைகள் உயிரிழந்து கரையொதுங்குகின்றன என்று மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-02)



# சீனாவின் உதவியில் 1,996 வீடுகள்; திட்டத்தை துரிதப்படுத்த பணிப்பு!

*கொழும்பு, ஜன. 29*

சீன அரசாங்கத்தின் உதவியுடன் குறைந்த வருமானம் பெறுவோர், கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்காக நிர்மாணிக்கப்படவுள்ள ஆயிரத்து 996 வீடுகளின் திட்டத்தைத் துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆலோசனை வழங்கினார்.

அத்துடன் அவர், எதிர்வரும் மார்ச் மாத தொடக்கத்தில் இங்கு நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதற்கு முன்னதாக சீன அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய பின்னர், இந்தத் திட்டத்தின் ஆரம்பப் பணிகளை முடிக்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை வழங்கினார்.

இந்த வீடுகள் மூன்றாண்டுகளில் நிர்மாணிக்கப்படும் இந்த 1,996 வீடுகளில் 1,888 வீடுகள் கொழும்பில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கும், 108 வீடுகள் இந்நாட்டின் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கும் ஒதுக்கப்படும்.

இதன்படி, பேலியகொடை துடுகெமுனு வீதியில் 615 வீடுகள், தெமட்டகொடை எழுமடுவ தோட்டத்தில் 586 வீடுகள், மொறட்டுவை பெட்டரி தோட்டத்தில் 575 வீடுகள், மஹரகம அம்பவத்தையில் 112 வீடுகள் மற்றும் கொட்டாவ பழத்துருவத்தையில் 108 வீடுகளும் கட்டப்படவுள்ளன.

கொட்டாவை பழத்துருவத்தயில் கட்டப்படவுள்ள 108 வீடுகளும் கலைஞர்கள், ஊடகவியலாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த திட்டத்துக்கு சீன அரசாங்கம் 55.2 கோடி யுவான் நிதியுதவியை வழங்குகிறது. இது இலங்கை மதிப்பில் சுமார் 2 ஆயிரத்து 448 கோடி ரூபாயாகும். 8 இடங்களில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்த வீட்டுத் திட்டத்தில், இரு இரண்டு இடங்களுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. நீண்டநாள் பிரார்த்தனைகள் நிறைவேறும். புதியவர்கள் நண்பர்களாவார்கள்.

**இடபம்**
எதிர்ப்புகள் அடங்கும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். பழைய கடனை குறித்து அவ்வப்போது யோசிப்பீர்கள். வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள்.

**மிதுனம்**
துணிச்சலான முடிவுகள் எடுப்பீர்கள். உடன் பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**கடகம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். அதிரடி மாற்றம் உண்டாகும்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு, மூன்று வேலைகளை இழுத்துப் போட்டுப்பார்க்க வேண்டி வரும். வியாபாரத்தில் வேலையாட்கள் அதிருப்தி அடைவார்கள்.

**கன்னி**
குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து போகும். சாலைகளை கவனமாக கடந்து செல்லுங்கள். வீண் வாக்குவாதங்களில் ஈடுபட வேண்டாம். அரசு விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம்.

**துலாம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். பழைய பிரச்னைகளைத் தீர்ப்பீர்கள். வீட்டை அழகுப்படுத்துவீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள்.

**விருட்சிகம்**
கடந்த கால சுகமான அனுபவங்களை சாதனைகளை அவ்வப்போது நினைத்து மகிழ்வீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள்.

**தனுசு**
உணர்ச்சி பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் பேசுவீர்கள் செயல்படுவீர்கள். திடீர்முடிவுகள் எடுப்பீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் தொடங்கியிருப்பதால் வேலைச் சுமையால் உடல் அசதி சோர்வு வந்து நீங்கும். சில விஷயங்களுக்கு அனுபவ அறிவை பயன்படுத்துவது நல்லது. பொறுமைத்தேவைப்படும் நாள்.

**கும்பம்**
குடும்ப விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். மனைவி வழியில் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள்.

**மீனம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். சில வேலைகளை விட்டுக்கொடுத்து முடிப்பீர்கள்.

# பா. ஜ. கவுடன் கூட்டணிக்கு தயாராகி வரும் பா. ம. கட்சி!

சென்னை, ஜன. 29

தி. மு. க. கூட்டணியில் புதிய கட்சிகளுக்கு இடமில்லை என்று முதல்வர் ஸ்டாலின் சூசகமாக தெரிவித்துள்ளார். இதனால், அந்தக் கூட் டணியில் இடம்பெற தயாராகி வந்த பா. ம. க. மீண்டும் பா. ஜ. கவில் சேர்வதற்கு தயாராகி வருகிறது.

எதிர்வரும், பாராளுமன்றத் தேர்தலில் கூட்டணியில் உள்ள எந்தக் கட்சியும் தொகுதியை விட்டுக் கொடுக்க தயாராக இல்லை. அத்துடன், பாட்டாளி மக்கள் கட்சியை விடுதலை சிறுத்தைகள் கட்சி கடுமையாக எதிர்க்கிறது. இந்நிலையில், கூட்டணியில் குழப்பத்தை ஏற்படுத்த விரும்பாத தி.மு.க., தலைமை, புதிய கட்சிகளை சேர்ப்பதில்லை என்ற முடிவுக்கு வந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்தக் கூட்டணியில் சேர விரும்பிய பா. ம. க., மக்கள் நீதி மையம், தே. மு. தி .க. உள்ளிட்ட கட்சிகளுக்கு இடமில்லை என்பது திருச்சியில் விடுதலை சிறுத்தைகள் நடத்திய மாநாட்டுக்கு பின் தெளிவாகி விட்டது.

விடுதலை சிறுத்தைகள் மாநாட்டில் பேசிய முதல்வர் ஸ்டாலின், "தி.மு.க.,வுக்கும், விடுதலை சிறுத்தைகளுக்கும் இருப்பது தேர்தல் உறவு அல்ல, அரசியல் உறவு அல்ல; கொள்கை உறவு. ஈ.வெ.ரா., வையும், அம்பேத்கரையும் யாராவது பிரிக்க முடியுமா? அதுபோலத்தான் தி.மு.கவும் விடுதலை சிறுத்தைகள் கட்சியும்" என்றார்.

"பா. ஜ. கவும், பா. ம. கவும் இருக்கும் இடத்தில் ஒரு போதும் இருக்க மாட்டோம்" என விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் பேசி வரும் நிலையில், பா.ம.க.,வுக்கு இடமில்லை என்பதையே, முதல்வர் ஸ்டாலின் தன் பேச்சின் வாயிலாக சுட்டிக்காட்டி இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதேநேரம், அ.தி.மு.க. கூட்டணியிலும் பா. ம. க. சேர விரும்பவில்லை. இதனால், பா. ஜ. க. கூட்டணியில் சேர்வதற்கு அந்தக் கட்சி முயன்று வருகின்றது. (ஐ)

# தீயசக்தியான தி. மு.கவை மக்கள் விரட்டியடிப்பார்கள்

## எடப்பாடி பழனிசாமி



சென்னை, ஜன. 29

தீய சக்தியான தி.மு.க.வை மக்கள் விரட்டியடிப்பார்கள் - இவ்வாறு தெரிவித்துள்ளார் அ. தி. மு. கவின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி.

விராலிமலையில் நேற்று பேசிய அவர்,

அ. தி. மு. க. ஆட்சி காலத்தில் விராலிமலை உள்ளடக்கிய புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளின் 50 ஆண்டுகால கனவு திட்டமான காவிரி குண்டாறு இணைப்பு திட்டம் நிறைவேற்றப்பட்டது. தி.மு.க. அரசு அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக அந்தத் திட்டத்தை கிடப்பில் போட்டு விட்டது. முதலமைச்சர் ஸ்டாலினுக்கு வருகிற தேர்தலில் மக்கள் பதிலடி கொடுப்பார்கள்.

மீண்டும் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் காவிரி குண்டாறு வைகை இணைப்பு திட்டம் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்படும். அ. தி. மு. க. ஆட்சி காலத்தில் கொண்டு வரப்பட்ட அம்மா மினி கிளினிக், அரசு பள்ளி மாண வர்களுக்கான மடிக்கணினி வழங்கும் திட்டம், தாலிக்கு தங்கம், இரு சக்கர வாகனம் வழங்கும் திட்டம் உள்ளிட்ட திட்டங்களை தி.மு.க. அரசு நிறுத்திவிட்டது.

இதற்கெல்லாம் வருகிற தேர்தலில் விடிவு பிறக்கும். தீய சக்தியான தி.மு.க.வை மக்கள் விரட்டியடிப்பார்கள். (ஐ)

# 'தி. மு. க. பைல்ஸ் - 3' வெளியானது!

சென்னை, ஜன. 29

'தி. மு. க. பைல்ஸ்' பாகம் மூன்றின் 3ஆவது ஒலிப் பேழையை வெளியிட்ட தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை, அமைச்சர் விரும்பிய வர்களுக்கே ஸ்பெக்ட்ரம் ஒதுக்கப்பட்டுள்ளது என குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை தி. மு. க. மீது ஊழல், முறைகேடு உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளை வைத்து வருகிறார். தி. மு. கவுக்கு எதிராக அரசியல் செய்து வரும் அண்ணாமலை, 'தி. மு. க. பைல்ஸ்' என்ற பெயரில் ஊழல் பட்டியலை வெளியிட்டு வருகிறார். கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 'தி. மு. க. பைல்ஸ் பாகம் ஒன்றை' வெளியிட்டார்.

அதைத் தொடர்ந்து, கடந்த ஜூலையில் இரண்டாம் பாகத்தை வெளியிட்டார். இப்போது, பாகம் மூன்றை வெளியிட்டுள்ளார்.

இதில், தி. மு. க. எம். பி ஆ.ராசா, முன்னாள் உளவுத் துறை அதிகாரி ஜாபர் சேட் இடையிலான தொலைபேசி உரையாடல்கள் உள்ளன.

அண்ணாமலையின் இந்த ஒலிப்பேழையும் கடந்த ஒலிப்பேழைகளைப் போல தமிழக அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தும் என்று கூறப்படுகின்றது.

(ஐ)

# காந்தியை நான் அவமதிக்கவில்லை!

## ஆளுநர் ரவி விளக்கம்



சென்னை, ஜன. 29

மகாத்மா காந்தியை நான் அவமதிக்கவில்லை என்று ஆளுநர் ஆர். என். ரவி தெரிவித்துள்ளார்.


பல்கலைக்கழகத்தில் நடந்த நேதாஜி சுபாஸ் சந்திர போஸின் 127 ஆவது பிறந்த நாள் விழாவில் ஆளுநர் ஆர்.என்.ரவி கலந்து கொண்டார். அப்போது பேசிய அவர், மகாத்மா காந்தியின் வெள்ளையனே வெளியேறு இயக்கம் பெரிதாக எதையும் சாதித்து விடவில்லை. நேதாஜி உருவாக்கிய இந்திய தேதிய ராணுவம் பிரிட்டிஷ் அரசை எதிர்த்து போரிட்டதால்தான் ஆங்கிலேயர்கள் நாட்டிற்கு விடுதலை அளித்ததாக கூறினார்.

ஆளுநரின் இந்த பேச்சுக்கு பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்தனர்.

இதற்கு விளக்கம் அளித்து ஆளுநர் வெளியிட்ட அறிக்கையில்,

"நான் சுபாஷ் சந்திரபோஸின் பிறந்த நாள் விழாவில் பேசியதை ஊடகங்கள் திரித்து செய்தியாக்கி விட்டன. நான் காந்தியை அவமதிக்கவில்லை. அவருடைய போதனைகள் என்னுடைய வாழ்க்கைக்கு பயனுள்ளதாக இருந்தன. காந்தியை நான் அவமதித்துவிட்டதாக வெளியான செய்தி உண்மைக்கு புறம்பானவை.

தேசத்தின் சுதந்திரத்திற்கு நேதாஜியின் பங்களிப்பு போதுமான அளவு பாராட்டப்படவில்லை என்பதை விளக்க முயன்றேன். ஆங்கிலேயருக்கு எதிரான நேதாஜியின் படைகள் நமது விமானப்படை மற்றும் கப்பல் படைக்கு முக்கியதுவம் அளித்தன. இதுமட்டும் இல்லாமல் நேதாஜியின் பங்களிப்பு இல்லை என்றால் நமக்கு சுதந்திரம் கிடைக்க இன்னும் கூடுதல் ஆண்டுகள் ஆகியிருக்கலாம் " என்று கூறியுள்ளார்.



## நல்லூர் ஆலய நிர்வாகியின் தாயார் நேற்று காலமானார்!

யாழ்ப்பாணம், ஜன. 29

நல்லூர் கந்தசாமி கோவிலின் பத்தாவது நிர்வாகி அமரர் குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் துணைவியாரும் தற்போதைய நிர்வாகியான குமரேஷ் ஷயந்தன மாப்பாண முதலியாரின் தாயாருமான அமரர் சுகிர்தாதேவி குமாரதாஸ் மாப்பாண முதலியார் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவரின் இறுதிக்கிரியைகள் நல்லூர் மாப்பாணர் வளவில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளன.

(ஐ)

## தேசிய ரீதியில் சாதனை படைத்த வடக்கு வீரர்களுக்கு கௌரவிப்பு!

**யாழ்ப்பாணம், ஜன. 29**

**தேசிய ரீதியில் நடைபெற்ற மெய்வல்லுநர் விளையாட்டு போட்டிகளில் சாதனை புரிந்த வடக்கு மாகாண வீர, வீராங்கனைகளை கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இரவு சுதுமலையில் அமைந்துள்ள தனியார் திருமண மண்டபம் ஒன்றில் நடைபெற்றது.**




விருந்தினர்கள் வரவேற்பை தொடர்ந்து ஆரம்பமான நிகழ்வில் விருந்தினர்களின் உரைகள், இளைஞர் - யுவதிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதைத் தொடர்ந்து சாதனை வீர, வீராங்கனைகள் கௌரவிக்கப்பட்டனர்.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் பிரதம அதிதியாக கலந்துகொண்ட இந்த நிகழ்வில், சிறப்பு விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் பசிந்து குணவர்த்தன, யாழ்ப்பாண இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் வினோதினி சிறிமேனன், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களின் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர்கள், இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர்கள் இளைஞர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-02)

## பொலிஸாரிடம் நீதி கேட்டு இரு குடும்பங்கள் போராட்டம்!



முல்லைத்தீவு, ஜன. 29

வீட்டில் வசிப்பதற்கு பாதுகாப்பு இல்லை, பொலிஸார் நியாயமான நீதியைப் பெற்றுத்தரவில்லை எனக் கூறி இரு குடும்பங்கள் நேற்றுமுன்தினம் முதல் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

முல்லைத்தீவு - கேப்பாபிலவு கிராமத்தில் சட்டவிரோத செயல் பாட்டில் ஈடுபட்டுவரும் அயலவ ரால் இரு குடும்பங்களுக்கும் இடையே முறுகல் இடம்பெற்று வருகின்றது. இது தொடர்பில் பொலிஸாருக்கு முறையிட்டும் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று கூறியே அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கேப்பாபிலவு மாதிரி கிராமம் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணி தொடக்கம் இரு குடும்பங்களை சேர்ந்த 12 பேர் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டு வருபவர்களில் ஒருவரின் வீட்டில் சட்டவிரோத செயலில் ஈடுபடுகிறார் என்று குற்றஞ்சாட்டப்படும் நபர் போதைப்பொருளை வைத்துவிட்டு, பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தார் என்றும் இதைத் தொடர்ந்து 15 வயது சிறுமி கைது செய்யப்பட் டார் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தை கண்டித்தும் பொலிஸார் தமக்கு நியாயம் - பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் கோரியே இரு குடும்பங்களும் போராட் டத்தில் ஈடுபட்டுள்ளன. (ஐ-10)

## வவுனியா விபத்தில் ஒருவர் படுகாயம்!

வவுனியா, ஜன. 29

வவுனியா ஏ- 9 வீதியில் வலயக்கல்வி பணிமணைக்கு முன்பாக நேற்று காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி பயணித்த அதிசொகுசு பேருந்து மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு இந்த விபத்து ஏற்பட்டது.

மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் இதில் படுகாயமடைந்து வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

## கப்பலேந்தி மாதா தேவாலயத்தில் செபஸ்தியார் பெருவிழா சிறப்பு!

வடமராட்சி, ஜன. 29

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கப்பலேந்திமாதா ஆலயத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை புனித செபஸ்தியார் பெருவிழா கொண்டாடப்பட்டது.

பங்குத்தந்தை அ. அமல்ராஜ் அடிகளார் தலைமையில் ஆரம்பமான பெருவிழா திருப்பலியை அருட்தந்தை ரமேஷ் அடிகளார் ஒப்புக் கொடுத்ததோடு அவருடன் இணைந்து அருட்தந்தை.ச. வின்சன் அ. ம. தி அடிகளாரும் பெருவிழாவை சிறப்பித்தார்.

இந்த நிகழ்வில் பெருமளவான பொதுமக்கள் பங்கேற்றனர். திருப்பலி நிறைவில்



அண்மையில் இலங்கை அரசின் உயரிய விருதான “தேசபந்து“ விருதை பெற்ற அருட்தந்தை ரமேஷ் அடிகளார் கௌரவிக்கப்பட்டார்.

(ஐ-02)

## பசுமை அறிவொளி நிகழ்ச்சி நாவற்குழியில் முன்னெடுப்பு



யாழ்ப்பாணம், ஜன. 29

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி நாவற்குழியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நாவற்குழி முத்தமிழ் சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் கனடா, இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் ந. கேதீஸ்வரசிவம், செ. கிருஸ்ணகோபால், கு. கல்யாணசுந்தரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டிருந்தார்கள்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் மாணவர்களுக்குச் சூழல் அறிவைப் புகட்டி, அவர்களிடையே சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் ஊடாக, அவர்களைச் சூழல் பாதுகாப்பில் பங்கேற்பாளர்களாக்கும் நோக்குடன் பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டத்தைக் கிராமங்கள் தோறும் முன்னெடுத்து வருகிறது. இதன் தொடராகவே நாவற்குழியில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் அதிக எண்ணிக்கையான மாணவர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர். பங்குபற்றிய மாணவர்கள் அனைவருக்கும் கனடா ரொறன்ரோவின் மனித நேயக்குரல் அமைப்பின் அனுசரணையுடன் சூழல் விழிப்புணர்வு அப்பியாச கொப்பிகள் வழங்கப்பட்டன.

(ஐ)

# அடிப்படை உரிமைகளை கட்டுப்படுத்தும் அதிகாரங்கள் பொலிஸாருக்கு வேண்டாம்!

## மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்து

**கொழும்பு, ஜன. 29**

**உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் மூலம் பொது மக்களின் அடிப்படை உரிமைகளை கட்டுப்படுத்தும் அதிகாரங்களை பொலிஸாருக்கு வழங்கவேண்டாம் என இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.**

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் குறித்த தனது அவதானிப்புகள் குறித்து இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை எழுதியுள்ளது.

அதில், பயங்கரவாத குற்றம் என்பதற்கான வரைவிலணக்கத்தை கணிசமான அளவில் குறைக்க வேண்டும். அரசமைப்பில் தெரிவிக்கப்பட் டுள்ளபடி பயங்கரவாத குற்ற சந்தேகநபருக்கு எதிராக பிறப்பிக்கப்படும் தடுப்பு உத்தரவு நீதித்துறையின் கண்காணிப் புக்கு உட்படுத்தப்படுவதை உறுதி செய்யவேண்டும்.

பயங்கரவாத குற்றச் செயல்கள் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட எந்த சந்தேகநபருக்கும் எந்த நேரத்திலும் பிணை வழங்கும் அதிகாரம் நீதிபதிகளுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்யவேண்டும். சுதந்திரம் பறிக்கப்பட்ட ஒவ்வொரு நபருக்கும் சட்டத்தின் உதவியை நாடுவதற்கான உரிமை வழங்கப்படுவதை உறுதி செய்யவேண்டும். இந்த உரிமையை கண்மூடித்தனமான நியாயமற்ற நிபந்தனைகள் இன்றி வழங்கவேண்டும். பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை கட்டுப்படுத்தும் அதிகாரங்களை பொலிஸாருக்கு வழங்கவேண்டாம் - என்றுள்ளது.

(ஐ)

# தொழுநோயின் தாக்கம் நாட்டில் அதிகரித்துள்ளது

கொழும்பு, ஜன. 29

நாட்டில் கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் தொழுநோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. அத்துடன், தற்போது அதிகவிளலான மக்கள் மத்தியில் தொழுநோய் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது என்று தொழுநோய் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமை உலக தொழுநோய் தினமாக அனுசரிக்கப்படுகின்றது. 'தொழுநோயை தோற்கடிப்போம்' என்ற தொனிப்பொருளில் இந்த வருடம் தொழுநோயாளர் தினம் அனுசரிக்கப்படுகின்றது.

இதேவேளை, நாட்டில் கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் தொழுநோயாளிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தொழுநோய் கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் பிரசாத் ரணவீர தெரிவித்தார்.

மேலும், சிறுவர்களிடையே பரவும் தொழுநோயைக் கட்டுப்படுத்துவதற்கு விசேட வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

(ஐ)

# விரைவில் அமைச்சரவையில் மாற்றம் நிகழ்வதற்கு சாத்தியம்?

கொழும்பு, ஜன. 29

விரைவில் அமைச்சரவை மாற்றம் நிகழ்வதற்கான சாத்தியம் உள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

தற்போதைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற அமர்வுகள் எதிர்வரும் பெப்ரவரி 07ம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகும்.

இதற்கு முன்னதாக, அமைச்சரவையில் மாற்றம் ஒன்றை மேற்கொள்ளவும், புதியவர்கள் சிலருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கவும் ஜனாதிபதி உத்தேசித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

மேலும் அமைச்சு பதவிகள் மற்றும் வேறு சலுகைகளைப் பெறும் நோக்கில் எதிர்க்கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இந்த வாரத்தில் அரசாங்கத்துடன் இணைவர் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஐ)

# அதிவேக நெடுஞ்சாலை விபத்துகளில் 79 பேர் பலி!

கொழும்பு, ஜன. 29

அதிவேக நெடுஞ்சாலை போக்குவரத்து ஆரம்பமானது முதல் நடந்த விபத்துகளில் 79 பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸ் தலைமையகத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன.

அதிவேக நெடுஞ்சாலை போக்குவரத்து 2011 இல் தொடங்கியது. ஆரம்ப ஆண்டில் எந்த உயிரிழப்பு விபத்துகளும் பதிவாகவில்லை. கடந்த ஆண்டு மட்டும் அதிவேக நெடுஞ்சாலை விபத்துகளில் 4 பேரும் இந்த ஆண்டு கடந்த 26 நாட்களில் 4 பேரும் உயிரிழந்தனர்.

2011ஆம் ஆண்டுக்குப் பிறகு 2022ஆம் ஆண்டுதான் அதிக வீதி விபத்துகளால் உயிரிழப்புகள் நிகழ்ந்தன. தொடங்கப்பட்டதில் இருந்து இதுவரை 88 பேர் அதிவேக நெடுஞ்சாலையில் நடக்கும் விபத்துகளில் படுகாயங்களுக்கு உள்ளாகினர்.

அதிவேக நெடுஞ்சாலை உரிய தரத்துக்கு அமைய நிர்மாணிக்கப்பட்டுள்ளது. எனவே, சாரதிகள் கவனமாக வாகனத்தை செலுத்தினால் விபத்துகளை தவிர்க்க முடியும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவா தெரிவித்தார்.

(ஐ)

# ஐ. எம். எவ்வுடனான ஒப்பந்தங்கள் குறித்து பாராளுமன்றுக்கு அறிவிக்க நடவடிக்கை

## பாராளுமன்றை ஒத்திவைக்க இதுவே காரணம் என்கிறார் வஜிர அபேவர்த்தன



கொழும்பு, ஜன. 29

சர்வதேச நாணய நிதியம் (ஐ. எம். எவ்) உள்ளிட்ட நிதி நிறுவனங்களுடன் அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள ஒப்பந்தங்கள், இவற்றின் மூலம் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தேசிய கொள்கை வரைவை பாராளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டியுள்ளது. இதனால்தான் ஜனாதிபதி பாராளுமன்ற கூட்டத்தொடரை ஒத்துவைத்து இந்த விடயங்களை தெரிவிக்க நடவடிக்கை எடுத்திருக்கிறார் என்று ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற கூட்டத்தொடரை ஒத்திவைக்க ஜனாதிபதி எடுத்த நடவடிக்கை தொடர்பாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், பாராளுமன்ற கூட்டத்தொடரை இடைநிறுத்தி ஒத்திவைக்க ஜனாதிபதி எடுத்த நடவடிக்கை தொடர்பில் ஒரு சில அரசியல் கட்சி தலைவர்கள் பல்வேறு கதைகளை கூறி வருகின்றனர். அதனால் ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை தொடர்பாக பொதுமக்கள் பிழையாக விளங்கிக்கொள்ளக் கூடாது. மக்களும் இதனை தெரிந்துகொள்ள வேண்டும்.

தற்போது பாராளுமன்ற கூட்டத்தொடர் முடிவுறுத்தப்பட்டிருக்கிறது. பெப்ரவரி 7ஆம் திகதி ஜனாதிபதி மீண்டும் சம்பிரதாய அடிப்படையில் அதன் அமர்வை ஆரம்பித்து வைப்பார் - இது முக்கியமான நிகழ்வாகும். ஏனெனில் நாங்கள் சர்வதேச நாணய நிதியம், அதேபோன்று வேறு நிதி நிறுவனங்களுடன் கடந்த ஒன்றரை வருடங்களாக மேற்கொண்ட கலந்துரையாடல்களில் மூலம் ஏற்பட்ட பொருளாதார மாற்றம் மற்றும் இறுதி இலக்கையும் வெற்றிகொண்டுள்ளதால் அது தொடர்பில் தேசிய கொள்கை வரைவு தொடர்பாக பாராளுமன்றத்துக்கு மீண்டும் நினைவூட்டப்பட வேண்டியுள்ளது.

அதேபோன்று வரவு - செலவு திட்ட அலுவலகம் உள்ளிட்ட ஏனைய அலுவலகங்கள் தொடர்பான செயல்பாடுகளை 2024 வருடத்துக்கு மீண்டும் மீட்டெடுக்க வேண்டியுள்ளது. அதற்காக புதிய பாராளுமன்ற கூட்டத்தொடரை ஆரம்பித்து, அதுதொடர்பான தேசிய கொள்கை வரைபை தெளிவுபடுத்துவது நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் அவர் அதனை செய்யவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

அதனால் பாராளுமன்ற கூட்டத்தொடரை ஜனாதிபதி ஒத்திவைத்துள்ளமை தொடர்பாக எதிர்க்கட்சிகள் தெரிவித்துவரும் பிரசாரம் தொடர்பில் பொது மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அத்துடன் பாராளுமன்ற கூட்டத்தொடர் இவ்வாறு ஒத்திவைக்கப்படுவது புதிய விடயமல்ல. கடந்த காலங்களிலும் ஆட்சியில் இருந்த தலைவர்களால் பாராளுமன்ற கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டு, சம்பிர தாய முறைப்படி ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கிறது - என்றார்.

# வீடுகள், கட்டடங்களை வாடகைக்கு வழங்கும்போது அவதானம் தேவை

## பொலிஸார் மக்களுக்கு அறிவுறுத்து



கொழும்பு, ஜன. 29

வீடுகள் மற்றும் கட்டடங்களை வாடகை அடிப்படையில் வழங்கும்போது எச்சரிக்கையுடன் செயல்படுமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் அதிக விலை கொடுத்து வீடுகள் மற்றும் கட்டடங்களை வாடகை அடிப்படையில் பெற்றுள்ளமை யுக்திய போதைப் பொருள் விசேட சோதனை நடவடிக்கையின் போது தெரியவந்துள்ளதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக, வீடுகள் மற்றும் கட்டடங்களை வாடகை அடிப்படையில் வழங்கும்போது, அவதானத்துடன் செயல்படுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

(ஐ)

# பரந்த கூட்டணியை அமைப்பதற்கு தயார்!

## சம்பிக்க எம். பி. கூறுகிறார்

கொழும்பு, ஜன. 29

எதிர்வரும் தேர்தல்களை முன்னிட்டு பரந்துபட்ட கூட்டணி ஒன்றை உருவாக்கி தனது வேலைத்திட்டத்துடன் பொது மக்களிடம் செல்லவுள்ளதாக சம்பிக்க ரணவக்க எம்.பி. தெரிவித்துள்ளார்.

நிகழ்வு ஒன்றில் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு நடைமுறை வேலைத்திட்டம் ஒன்று அவசியம் எனவும், அதற்காக எதிர்காலத்தில் பரந்த அரசியல் கூட்டணியை உருவாக்க அர்ப்பணிப்புடன் உள்ளேன்.

ஜனாதிபதி தேர்தலில் பல்வேறு நபர்கள் வேட்பாளர்களாக களமிறங்குவதாக கூறப்பட்டாலும் தரமான அரசியல் குழுவை அமைத்து எதிர்கால மாற்றங்களுக்கு உட்பட்ட வேலைத்திட்டத்தை மக்களிடம் முன்வைத்து எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கு பொருத்தமான வேட்பாளரை முன்வைப்போம்.

பொதுத் தேர்தல் என்றால் அதற்கு ஏற்ற அணி தேர்வு செய்யப்பட்டு முன்னிறுத்தப்படும். அதற்கு பதிலாக "நான்தான் ஜனாதிபதி வேட்பாளர், இதுவே எனது கொள்கை, எங்களுடன் சேருங்கள்" என்று நாம் யாருக்கும் அழைப்பு விடுக்க மாட்டோம். நாட்டைக் கட்டியெழுப்புவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டம் குறித்து கலந்துரையாடப்பட்டு, தகுதியான வேட்பாளர் ஒருவரையே நாங்கள் முன்னிறுத்துவோம்"

- என்றும் அவர் கூறினார். (ஐ)

# உயர்நீதிமன்ற பரிந்துரைகளை தவிர்த்து நிகழ்நிலை காப்பு சட்டம் நிறைவேற்றம்!

## இப்படி சாடுகின்றது ஐக்கிய மக்கள் சக்தி




**கொழும்பு, ஜன. 29**

**இங்கிலாந்தில் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தை அறிமுகப்படுத்த முன்னர் அது தொடர்பில் 4 ஆண்டுகள் ஊடக நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், இலங்கையில் உயர்நீதிமன்றத்தால் முன்மொழியப்பட்ட 13 பரிந்துரைகளைக்கூட கவனத்தில் கொள்ளாமல் குறித்த சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.**

எதிர்க்கட்சி தலைவரின் பணிமனையில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார். மேலும்,

இந்த ஆண்டு ஆட்சி மாற்றத்துக்கான ஆண்டாகும். மக்கள் தேர்தலை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். ஒக்ரோபரில் நிச்சயம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். மக்கள் ஆணையின்றியே தாம் ஆட்சியை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை ஜனாதிபதியும், பொதுஜன பெரமுனவினரும் நன்கு அறிவர்.

இந்நிலையில் சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்காக நிகழ்நிலை பாதுகாப்பு சட்ட மூலமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இவற்றின் ஊடாக மக்கள் தகவல்களை தெரிந்து கொள்வதை தடுப்பதற்காக இந்த சட்டம் அவசரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றத்தினால் பரிந்துரைக்கப்பட்ட 13 திருத்தங்கள் குறித்த சட்டத்தில் உள்வாங்கப்படவில்லை.

எனவே தான் அதனை சட்டமாக அதிபருக்கு அனுப்பி பரிசீலித்து அதன் பின்னரே கையெழுத்திடுவேன் என்று கூற வேண்டிய நிலைமை சபாநாயகருக்கு ஏற்பட்டுள்ளது. பேஸ்புக், கூகுள், வட்ஸ்அப் உள்ளிட்ட நிறுவனங்களும் இதற்கு எதிர்ப்பினை வெளியிட்டுள்ளன. சட்டங்களின் ஊடாக இவற்றைக் கட்டுப்படுத்த தீர்மானித்தால், நாமும் அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்போம் என அந்த நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இங்கிலாந்தில் இவ்வாறான சட்டமொன்றை நிறைவேற்றுவதற்கு 4 ஆண்டுகள் ஊடக நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், இலங்கையில் அவ்வாறு ஏதேனும் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டனவா? 2001இல் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்ற பின்னர் ஊடகவியலாளர்களுக்கு எதிரான சட்டத்தை உடன் அமுலாகும் வகையில் நீக்கினார்.

ஆனால், இன்று அந்த ரணில் விக்கிரமசிங்க இல்லை. மேற்கத்தேய உடையணிந்த ராஜபக்ஷக்களின் கொள்கை வாதியாகவே இன்றைய ரணில் விக்கிரமசிங்க செயற்படுகின்றார். இவ்வாறு எந்த முயற்சிகளை முன்னெடுத்தாலும் தமக்கான சந்தர்ப்பத்தில் மக்கள் உரிய பதிலை வழங்குவார்கள் - என்றார். (ஐ)

# உயர்தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் அதிகரிப்பு!

*கொழும்பு, ஜன. 29*

*க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றி முதல் தடவையிலேயே சித்தியடைந்து 2024 உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள, பொருளாதார பிரச்னைகளை எதிர்கொள்ளும் மாணவர்களுக்கான கொடுப்பனவை ஆயிரம் ரூபாயால் அதிகரிக்க ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். வரும் பெப்ரவரி மாதம் முதல் இந்த அதிகரித்த கொடுப்பனவு அதிகரிக்கப் படவுள்ளது.*

*மாணவர்களின் கோரிக்கையின் பிரகாரமே இந்தப் பணிப்புரையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.*

*நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் வாழும், கற்கும் திறன் கொண்ட ஆனால், பொருளாதார சிரமங்களுள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களின் எதிர்காலத்தை மேம்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பிரகாரம் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் வழிகாட்டலின் கீழ் ஜனாதிபதி நிதியம் இந்த புலமைப் பரிசில் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது.*

*2021/2022 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தின் கீழ், ஜனாதிபதி நிதியத்தால் புலமைப்பரிசில் பெறுபவர்களுக்கு மாதாந்தம் 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டதுடன் இதுவரை 10 மாதாந்த தவணைகள் வழங்கப்பட்டுள்ளன.*

*இதன்படி, புலமைப்பரிசில் தொகை அதிகரிப்புடன் 2024 பெப்ரவரி முதல் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வரை ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் ஜனாதிபதி நிதியிலிருந்து 6 ஆயிரம் ரூபாய் மாதாந்த உதவித்தொகை வழங்கப்படும்.*

*இதேவேளை, 2022-2023 ஆம் ஆண்டு க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றி உயர்தரப் பரீட்சைக்கு தகுதி பெற்ற மாணவர்களுக்கும் 6 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.*

*மேலும், ஜனாதிபதி நிதியத்தின் www.facebook.com/president.fund என்ற உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தை மற்றும் உத்தியோகபூர்வ YouTube rdyhd www.youtube.com/@PresidentsFund I like/follow அல்லது subscribe செய்யுமாறும் www.presidentsfund.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தைப் பார்வையிடுவதன் மூலம் இது தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் ஜனாதிபதி நிதியம் அறிவித்துள்ளது.* (ஐ)

# ஜனாதிபதி அநுரவே 100 சதவீதம் உறுதி!

## சொல்கிறார் வசந்த சமரசிங்க

*கொழும்பு, ஜன. 29*

*நாட்டின் அடுத்த ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க என்பது 100 வீதம் உறுதியானது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.*

*அத்துடன், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் ஒக்ரோபர் 17ஆம் திகதிக்கு முன்னதாக நடத்தப்பட வேண்டும். ஜனாதிபதி தேர்தலை ஒத்தி வைப்பதற்கு எவருக்கும் உரிமையில்லை.*

*எமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. இது உறுதி செய்யப்பட்ட விடயம். அனுரகுமார திஸநாயக்க ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் உடனடியாக பாராளுமன்றம் கலைக்கப்படும் - என்றும் அவர் கூறினார்.* (ஐ)

# 'யுக்திய' நடவடிக்கைகளில் 803 பேர் கைது

*கொழும்பு, ஜன. 29*

*நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின் போது நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் 803 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*இதன்போது போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடைய 562 சந்தேக நபர்களும் ஏனைய குற்றங்களுடன் தொடர்புடைய 241 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*இந்நிலையில் போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடைய 562 பேரில் 5 பேருக்கு எதிராக விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் போதைப்பொருளுக்கு அடிமையாக ஒருவர் புனர் வாழ்வு மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.*

*மேலும், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் விசேட பணியகத்தால் தேடப்பட்டு வரும் பட்டியலில் இருந்த 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*ஏனைய குற்றங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட 241 சந்தேக நபர்களில் 11 பேர் போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் திறந்த பிடியாணை பெற்றுள்ள நிலையில் 214 பேர் ஏனைய குற்றங்கள் தொடர்பில் திறந்த பிடியாணை பெற்றுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.*

*தலைமறைவான 7 சந்தேக நபர்களும், குற்றச் செயல்களுக்காக தேடப்பட்டு வந்த 9 சந்தேகநபர்களும் இந்த நடவடிக்கைகளில் கைது செய்யப்பட்டுள்ளனர்.* (ஐ)

# போதைப்பொருள் கடத்தல்காரர்களும் சேர்க்கப்படுவதே மோதலுக்கு காரணம்!

## புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம்

*கொழும்பு, ஜன. 29*

*கந்தகாடு புனர்வாழ்வு முகாமில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்கான அவசர வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.*

*போதைப்பொருள் கடத்தல்காரர்களும் புனர்வாழ்வு நிலையத்தில் அனுமதிக்கப்படுவதே முரண்பாடுகளுக்கு பிரதான காரணம் என்று அவர் கூறியுள்ளார்.*

*ஜனவரி மாதத்தில் இரண்டு தடவைகள் கந்தகாடு புனர்வாழ்வு முகாமில் கைதிகளுக்கு இடையில் மோதல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. தற்போது வரை நிலைமை கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் எனினும் இதற்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டுமெனவும் அவர் கூறினார்.* (ஐ)

# விளையாட்டுத்துறை அமைச்சின் இரு அரசிதழ்கள் இரத்தாகின!

*கொழும்பு, ஜன. 29*

*முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவால் வெளியிடப்பட்ட இரண்டு விசேட வர்த்தமானிகளை (அரசிதழ்) தற்போதைய விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ இரத்து செய்துள்ளார்.*

*இதன்படி, 2023 ஜூலை 28 ஆம் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கமான 2342/48 இரத்துச் செய்யப்படவுள்ளது. அத்துடன், இலங்கை கராத்தே சம்மேளனம் மற்றும் இலங்கை மோட்டார் விளையாட்டு சங்கத்தின் இடைக்கால குழுக்கள், அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளை கலைத்த வர்த்தமானி அறிவித்தலும் இரத்து செய்யப்பட்டுள்ளது.*

*தேசிய விளையாட்டு சங்கங்கள் அல்லது சம்மேளனங்களின் அரசியலமைப்பின் பிரகாரம், முன்னைய தேர்தல்களில் தெரிவுசெய்யப்பட்ட அதிகாரிகள், அவர்களின் சட்டப்பூர்வ பதவிக்காலம் முடிந்து புதிய தேர்தல் நடத்தப்படும் வரையில், சபைக்கு முன்பாக நியமிக்கப்படலாம் என்று அமைச்சர் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். ஷ* (ஐ)

# கஞ்சா செடி வளர்த்த பிரிட்டன் பிரஜை கைது!

*கொழும்பு, ஜன. 29*

*சுற்றுலா வீசா மூலம் இலங்கை வந்து பெலியத்தையில் தங்கியிருந்த பிரித்தானிய பிரஜை ஒருவர் கஞ்சா செடிகளை வளர்த்து வந்த குற்றச்சாட்டில் இராணுவ புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*குஷ் போதைபொருள் தயாரிப்பதற்காக இவர் குறித்த கஞ்சா செடிகளை வளர்த்து வந்துள்ளார் என்று கூறப்படுகின்றது.*

*இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது 5 அடி உயரமுடைய கஞ்சா செடிகள் பயிரிடப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டன.*

*இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.*



# மட்டு. இந்துக் கல்லூரியில் சிரமதானம் முன்னெடுப்பு

மட்டக்களப்பு, ஜன. 29

மட்டக்களப்பு இந்து கல்லூரியின் 78ஆவது கல்லூரி தினத்தை சிறப்பிக்கும் வகையில் மாபெரும் சிரமமான பணி நேற்று நடைபெற்றது.

கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் கல்லூரி அதிபர் பகீரதன் தலைமையில் நடைபெற்ற சிரமதான பணியில் கல்லூரி பழைய மாணவர்கள், கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலர் கலந்து கொண்டனர்

எதிர்வரும் பெப்ரவரி 5ஆம் திகதி கல்லூரி திறக்கப்பட்டு மாணவர்களின் கற்றல் செயல்பாடுகள் நடைபெறவுள்ள நிலையில் மாணவர்களின் சுகாதாரம், பாதுகாப்பு கருதியும் 78ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் இந்த சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது. (ஐ)

# அம்பாறையில் வெள்ள பாதிப்பு: விவரம் திரட்டும் பணி ஆரம்பம்!

அக்கரைப்பற்று, ஜன. 29

அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பான விவரங்கள் பிரதேச செயலகங்கள் ரீதியாக திரட்டப்பட்டு வருகின்றன என்ற அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன் தெரிவித்தார்.

அண்மையில் பெய்த பலத்த மழை, சேனநாயக சமுத்திர வான் கதவுகள் திறக்கப்பட்டதால் ஏற்பட்ட வெள்ளம் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட உட்கட்டுமானங்கள், அரச கட்டடங்கள், நீர்ப்பாசன கால்வாய்கள், வீதிகள், மதகுகள், வீடுகள் போன்றவை தொடர்பான விவரங்களே இவ்வாறு திரட்டப்படுகின்றன என்றும் அவர் கூறினார். (ஐ)

# ஜனாதிபதி ரணிலின் ஆட்சியிலும் தொடர்கிறது முஸ்லிம் விரோதம்!

## இம்ரான் எம். பி. சாடல்



**திருகோணமலை, ஜன. 29**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியின் கீழ் முஸ்லிம் விரோதப்போக்கு தொடர்ந்து வருகிறது என்று திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் குற்றஞ்சாட்டியுள்ளார். கிழக்கு மாகாண அமைச்சு செயலாளர் மாற்றத்தின் மூலம் இது உறுதிப்படுத்தப்படுகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.**

கிழக்கு மாகாணத்தில் உள்ள 5 அமைச்சுகளின் செயலாளர்களுள் இருவர் முஸ்லிம்களாகவும் இருவர் தமிழராகவும் ஒருவர் சிங்களவராகவும் நியமிக்கப்பட்டிருந்தனர். கிழக்கு மாகாண இனச் சமநிலையை கருத்தில் கொண்டு இந்த நியமனம் நடந்தது.

ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் கிழக்கு மாகாண அமைச்சு செயலாளர் நியமனத்தில் தகுதியுள்ளோர் இருந்தும் முஸ்லிம் உத்தியோகத்தர்கள் ஓரங்கட்டப்பட்டனர். 2 முஸ்லிம் செயலாளர்கள் பணியாற்ற வேண்டிய கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சில் மாத்திரம் ஒரு முஸ்லிம் உத்தியோகத்தர் செயலாளராகப் பணியாற்றினார்.

சமீபத்தில் அவரும் காரணமேதுமின்றி அப்பதவியில் இருந்து அகற்றப்பட்டுள்ளார். தற்போது கிழக்கு மாகாணத்தின் 5 அமைச்சுகளின் எந்த ஓர் அமைச்சிலும் முஸ்லிம் செயலாளர் இல்லை.

கடந்த காலங்களில் கிழக்கு மாகாணத்தில் உள்ள பொதுச் சேவை ஆணைக்குழு, வீடமைப்பு அதிகார சபை, சுற்றுலா அதிகார சபை, போக்குவரத்து அதிகார சபை, முன்பள்ளிப் பணியகம், கூட்டுறவு ஆணைக்குழு ஆகியவற்றின் தவிசாளர்களுள் சிலவற்றுக்கு முஸ்லிம் தவிசாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் இவற்றில் எந்தவொரு முஸ்லிம் தவிசாளர்களும் நியமிக்கப்படவில்லை. முஸ்லிம்கள் ஓரங்கட்டப்பட்டனர். இது குறித்து ஏற்கனவே நான் சுட்டிக்காட்டியுள்ளேன்.

தற்போது அந்த வரிசையில் அமைச்சு செயலாளர்கள் பதவியிலிருந்தும் முஸ்லிம் உத்தியோகத்தர்கள் அகற்றப்பட்டுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி முஸ்லிம் விரோதப் போக்குடன் செயற்பட்டு வருகின்றது என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இலங்கையில் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் மாகாணம் கிழக்கு மாகாணமாகும் இந்த மாகாணத்திலேயே முஸ்லிம்களுக்கு இந்த நிலையென்றால் ஏனைய மாகாண முஸ்லிம்களும் இது குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து பதவியில் நீடித்து இருப்பாராயின் சகல முஸ்லிம்களும் ஓரங்கட்டப்பட்டுவிடுவர் என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது - என்றார். (ஐ)

# 1,011 வர்த்தகர்களுக்கு எதிராக அம்பாறையில் சட்டநடவடிக்கை!

அக்கரைப்பற்று, ஜன. 29

அம்பாறை மாவட்டத்தில் கடந்த ஆண்டு நுகர்வோர் சட்டத்தை மீறிய ஆயிரத்து 11 வர்த்தகர்களுக்கு எதிராக 68 இலட்சத்து 68 ஆயிரத்து 998 ரூபாய் நீதிமன்றத்தால் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது என்று நுகர்வோர் அதிகார சபை யின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ். என். எம். சாலிய பண்டார தெரிவித்துள்ளார்.

அம்பாறை, தெஹியத்தகண்டிய, அக்கரைப்பற்று, பொத்துவில், கல்முனை, சம்மாந்துறை, சாய்ந்தமருது மற்றும் மருதமுனை ஆகிய பிரதேசங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் மேற்கொண்ட ஆயிரத்து 117 சுற்றிவளைப்புகளின் மூலம் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)



# கல்முனை றோட்டரியால் 917 பேருக்கு கண்ணாடிகள்

காரைதீவு, ஜன. 29

கல்முனை றோட்டரி கழகம் தெரிவு செய்யப்பட்ட 917 பயனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடிகளை வழங்கி வைத்தது.

கல்முனை ஆதார வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கண் சிகிச்சை முகாமில் இந்தக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

"குளோபல் ஹான்ட் சாரிட்டி" என்ற அவுஸ்ரேலிய அமைப்பின் அனுசரணையில், றோட்டரி கழகம் இந்தப் பணியை முன்னெடுத்தது.

கண் பரிசோதனை முகாமில் 15அவுஸ்ரேலிய கண் மருத்துவ நிபுணர்களும் பங்கேற்றனர். (ஐ)

# கிழக்கு மாகாணத்தின் முதலாவது குழந்தை நல பேராசிரியராக விஜி!

காரைதீவு, ஜன. 29

கிழக்கு மாகாணத்தின் முதலாவது குழந்தை நல மருத்துவ பேராசிரியராக

கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் விசேட குழந்தை நல மருத்துவ நிபுணருமான விஜி திருக்குமார் தெரிவாகியுள்ளார்.



காரைதீவை சேர்ந்த வைத்திய கலாநிதி திருமதி விஜயகுமாரி திருக்குமார் கொழும்பு பல்கலைக்கழகம், லண்டன் றோயல் உயர் கல்லூரி என்பவற்றில் பட்டங்கள் பெற்றவர்.

இவரது துணைவர் மருத்துவர் மார்க்கண்டு திருக்குமார் யாழ்ப்பாணம் உரும்பிராயை சேர்ந்தவர். இவரும், மகப்பேற்று நிபுணர் என்பதுடன், கிழக்கு பல்கலைக்கழக மருத்துவத் துறை பேராசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பொத்துவிலில் மீண்டும் டெங்கு பரவும் அபாயம்!

## சுகாதார மருத்துவ அதிகாரி எச்சரிக்கை

பொத்துவில், ஜன. 29

பொத்துவில் பிரதேசத்தில் மீண்டும் டெங்கு காய்ச்சல் பரவக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளது. இதனால், நுளம்பு பரவக்கூடிய வெற்றுக் காணிகளை வைத்திருப்போர் ஒரு வாரத்துக்குள் காணிகளை துப்பரவு செய்யுமாறு அந்தப் பிரதேசத்துக்கு பொறுப்பான சுகாதார மருத்துவ அதிகாரி ஏ.யூ.அப்துல் சமட் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, பொத்துவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் வீடு தோறும் டெங்கு தரிசிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. டெங்கு கட்டுப்பாட்டு பிரிவினர் வீடுகளுக்கு வரும் போது பொது மக்கள் தங்களது பூரண ஒத்துழைப்பை வழங்குவதுடன், சுற்றுப்புறச் சூழலில் தேங்கும் நீர் நிலைகளை கண்டறிந்து பூச்சி கொல்லி மருந்துகளை தெளிப்பதுடன் அல்லது உயிரியல் கட்டுப்பாட்டு முறை மூலம் நுளம்பு பெருக்கத்தை கட்டுப் படுத்த முடியும் - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

### ஐ. நா. அகதிகள் அமைப்புக்கான:

# நிதி உதவியை நிறுத்துவதாக 9 முக்கிய நாடுகள் அறிவிப்பு!




வாஷிங்டன், ஜன. 29
காஸாவில் சுமார் 20 இலட்சம் அகதிகளுக்கு மனிதநேய உதவிகளை வழங்கி வரும் ஐ. நா. அகதிகள் அமைப்பின் பலஸ்தீன பிரிவுக்கான நிதி உதவியை நிறுத்துவதாக அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட 9 நாடுகள் அறிவித்துள்ளன.

கடந்த ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பு தாக்குதல் நடத்தியது. இதில், ஆயிரத்து 200இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 250இற்கும் மேற்பட்டோர் பணயக் கைதிகளாக பிடிபட்டனர்.

இதையடுத்து ஹமாஸ் நிர்வகித்து வரும் காஸாமீது இஸ்ரேல் போரை ஆரம்பித்தது. இதில் 26 ஆயிரம் பேர் பலியாகினர். மூன்று மாதங்களுக்கு மேலாக போர் நீடித்து வருகிறது.

இதனிடையே தமது நாட்டின்மீது கடந்த ஒக்ரோபர் 7ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலில் ஐ. நா. அகதிகள் அமைப்பை சேர்ந்தோருக்கு தொடர்பு உள்ளதாக இஸ்ரேல் குற்றஞ்சாட்டியது.

ஐ. நா. அகதிகள் அமைப்பின் பலஸ்தீன பிரவு காஸாவில் மனிதநேய உதவிகளை செய்து வருகிறது. இதில், 13 ஆயிரம் பேர் பணியாற்றுகின்றனர். இதில், பெரும்பாலானவர்கள் பலஸ்தீனியர்கள்.

இந்தக் குற்றச்சாட்டை அடுத்து அந்த அமைப்பிலிருந்த சிலர் பணி நீக்கம் செய்யப்பட்டனர். இந்த நிலையில், இந்த அமைப்புக்கான நிதி உதவியை நிறுத்துவதாக அமெரிக்கா, இங்கிலாந்து அறிவித்தன. இதே போன்று, கனடா, ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, சுவிற்சர்லாந்து, பின்லாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளும் நிதி உதவியை நிறுத்துவதாக அறிவித்துள்ளன.

நிதிஉதவியை நிறுத்தியதற்கு பலஸ்தீன அகதிகளுக்கான ஐ. நா. அமைப்பின் தலைவர் பிலிப் லாசரினி கண்டனம் தெரிவித்துள்ளார்.

அதில், "20 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தங்கள் உயிர்வாழ்வுக்காக சார்ந்துள்ளனர். போருக்கு மத்தியில் இதுபோன்ற முடிவுகள் ஏற்கனவே, தலைவிரித்தாடும் பஞ்சத்தை அதிகரிக்க செய்யும். காஸாவில் உள்ள பலஸ்தீனியர்களுக்கு மேலும் ஒரு கூட்டுத் தண்டனையை கொடுக்காதீர்கள்" என்றார். (ஐ)

# தண்ணீர் நிறைந்த கோள் கண்டுபிடித்தது நாஸா!

வாஷிங்டன், ஜன. 29
பூமியில் இருந்து 97 ஒளியாண்டுகள் தூரத்தில் ஒரு கிரகத்தின் வளிமண்டலத்தில் நீர் நிறைந்திருப்பதை அமெரிக்காவின் நாஸா விண்வெளி ஆய்வு மையம் கண்டுபிடித்துள்ளது.

நாசாவின் 'ஹப்பிள் ஸ்பேஸ்' தொலைநோக்கி மூலம் இது கண்டறியப்பட்டுள்ளது. பூமியை விட இரண்டு மடங்கு பெரிதாக இருக்கும் ஜி. ஜே. 9827டி என்ற இந்த கிரகத்தில் நீர் மூலக்கூறுகள் அதிகமாக இருப்பதை நாஸா உறுதி செய்துள்ளது.

இந்தக் கிரகத்தின் வளிமண்டலத்தில் ஐதரசன் நீர் மூலக்கூறுகளோடு நீராவியும் கலந்து இருப்பதால் உறைந்த பனிக்கட்டிகள் அதிகமாக இருக்க வாய்ப்புள்ளது. இதற்கு முன்பு கண்டறியப்பட்ட நீர் மூலக்கூறு இருக்கும் கிரகங்களை ஒப்பிடும்போது இது பூமிக்கு மிகவும் அருகில் இருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பாகிஸ்தானில் நிமோனியா; 244 சிறுவர்கள் உயிரிழப்பு!

லாகூர், ஜன. 29
பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாகாணத்தில் நிமோனியா பாதிப்பு வேகமாக பரவி வருகிறது. இதன் பாதிப்பால் 244 சிறார்கள் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானில் தற்போது நிலவி வரும் கடும் குளிர் காரணமாக நிமோனியா பரவல் மேலும் அதிகரித்துள்ளதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒரு மாதத்தில் மட்டும் 244 சிறார்கள் நிமோனியா காய்ச்சலால் உயிரிழந்தனர். மேலும், ஒருநாளில் பஞ்சாப் மாகாணத்தில் புதிதாக 942 பேருக்கும், லாகூரில் 212 பேருக்கும் நிமோனியா பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிமோனியா பரவலை கட்டுப்படுத்த பாகிஸ்தான் சுகாதாரத்துறை பல்வேறு நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. (ஐ)

# 9 பாகிஸ்தானியர்கள் ஈரானில் சுட்டுக்கொலை!

### தொடரும் பழிவாங்கல்களால் பதற்றம்



தெஹ்ரான், ஜன. 29
ஈரானின் சிஸ்டான் - பலுசிஸ்தான் மாகாணத்தில் சரவான் நகரில் ஈரானியர்கள் அல்லாத 9 பேரை அடையாளம் தெரியாத ஆயுதமேந்திய நபர்கள் சுட்டு கொன்றனர்.

எனினும், எந்தவொரு குழுவும் இதற்கு பொறுப்பேற்கவில்லை. கொல்லப்பட்டவர்கள் அனைவரும் பாகிஸ்தானியர்கள் என்று பாகிஸ்தான் தூதுவர் அடையாளம் காட்டியுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு முழு ஆதரவை தூதரகம் வழங்கும். இந்த விவகாரத்தில் முழு ஒத்துழைப்பை வழங்கும்படி ஈரானிடம் கேட்டிருக்கிறோம் என் றும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில், பாகிஸ்தானை அடிப்படையாகக் கொண்ட சன்னி பிரிவை சேர்ந்த ஜெய்ஷ் அல்-அடில் என்ற பயங்கரவாத அமைப்பை இலக்காக கொண்டு ஈரான் அரசு ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தியது.

பாகிஸ்தானின் மேற்கு பகுதியில் பலுசிஸ்தானில் நடந்த இந்த தாக்குதலில் 2 சிறுவர்கள் உயிரிழந்தனர். 3 பேர் காயமடைந்தனர். இதற்கு பதிலடியாக ஈரான் மீது பாகிஸ்தான் நடத்திய தாக்குதலில் 4 சிறுவர்கள் உட்பட 7 பேர் பலியாகினர்.

இந்த நிலையிலேயே, ஈரானில் 9 பாகிஸ்தானியர்கள் கொல்லப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.


ஈரானை சகோதர நாடு என்று பாகிஸ்தான் கூறி வந்த நிலையில், அந்த நாடுகளுக்கு இடையிலான இந்தத் தாக்குதல்கள் உலக நாடுகளிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளன. (ஐ)

# 2024 ஜனாதிபதி தேர்தல் ட்ரம்ப் போட்டியிடுவார்!

கொலம்பியா, ஜன. 29
அமெரிக்காவில் இந்த ஆண்டு நவம்பர் 5ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது.

இதில்,முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குடியரசு கட்சியின் சார்பில் போட்டியிடுவார் என்று அறிய வருகின்றது.

எனினும், குடியரசு கட்சியை சேர்ந்தவரான நிக்கி ஹேலி (ஐக்கிய நாடுகள் அவையின் முன்னாள் தூதர்) வேட்பாளர் தெரிவில் போட்டியில் உள்ளார்.



இந்த நிலையில், குடியரசு கட்சியின் தலைவரான ரோனா மெக்டேனியல் கூறும்போது, "ஹேலி மிகப்பெரிய பிரசாரத்தை நடத்தியிருந்தாலும், கட்சியினர் எங்கள் இறுதி வேட்பாளரை சுற்றி ஒன்றுபட வேண்டும். அது டொனால்ட் ட்ரம்பாக இருக்கப்போகிறார் என்று கூறியுள்ளார்.

குடியரசு கட்சியின் தேசிய குழு கூட்டம் அடுத்தவாரம் நடைபெறவுள்ளது. இதில், ஜனாதிபதி வேட்பாளராக ட்ரம்ப் அறிவிக்கப்படுவார் என்று தெரிய வருகிறது. (ஐ)

# உலகின் மிகப்பெரிய கப்பல் முதல் பயணத்தை ஆரம்பித்தது



மியாமி, ஜன. 29
றோயல் கரீபியன் நிறுவனத்துக்கு சொந்தமான உலகின் மிகப் பிரம்மாண்டமான பயணிகள் சொகுசு கப்பலான "ஐகன் ஒவ் தி சீ"ஸ்" (Icon of the Seas) அதன் முதலாவது பயணத்தை ஆரம்பித்துள்ளது.

அமெரிக்காவின் புளோரிடா, மியாமியில் இருந்து பயணத்தை தொடங்கிய இந்தக் கப்பல், தனது முதல் பயணத்தின்போது கரீபியன் தீவுகளை 7 நாட்கள் சுற்றி வரவுள்ளது.

இந்த சொகுசு கப்பலின் நீளம் 365 மீற்றர் ஆகும். 20 தளங்கள் கொண்ட இந்த கப்பலில் 7 நீச்சல் தடாகங்கள் உள்ளன. 7 ஆயிரத்து 600 பேர் பயணிக்க முடியும்.

இந்தக் கப்பல் டைட்டானிக் கப்பலை விட ஐந்து மடங்கு பெரியது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நிஷாந்த மரணமான விபத்தில் மூன்றாவது வாகனம் தொடர்பு

**கொழும்பு, ஜன. 29**
**இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த உயிரிழந்த வாகன விபத்தில் தொடர்புபட்டிருக்ககூடிய மூன்றாவது வாகனம் குறித்து விசாரணைகள் நடைபெறுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.**



இந்த மூன்றாவது வாகனம் தொடர்பில் விபத்தில் சிக்கிய இரு வாகனங்களின் சாரதிகளும் தெரிவித்துள்ளனர். இந்த வாகனம் குறித்து விசாரிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சரின் வாகன சாரதியும் கொள்கலன் சாரதியும் அதிகவேகமாக வாகனங்களை செலுத்தியமை, கவனக்குறைவு, அப்பகுதியில் வீதிவிளக்குகள் ஒளிராமை என்பவற்றுடன் இராஜாங்க அமைச்சரின் சாரதி தொடர்ச்சியாக 6 மணி நேரம் வாகனத்தை செலுத்தியமையும் விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

அத்துடன், மூன்றாவது வாகனமொன்று வழிவிட மறுத்தது எனவும் விசாரணையின் போது, சனத் நிஷாந்தவினதும் கொள்கலன் வாகனத்தினதும் சாரதிகள் தெரிவித்தனர். (ஐ)

# வெள்ளவத்தை கடலுக்கு செல்வோருக்கு எச்சரிக்கை

*கொழும்பு, ஜன. 29*

வெள்ளவத்தை ரயில் நிலையத்தை அண்மித்த கடல் பகுதிக்கு செல்லும் மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் முதலையின் நடமாட்டம் ஒன்று அவதானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மக்களுக்கு அறிவிக்கும் அறிவிப்பு பலகை ஒன்றும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. பாடசாலை விடுமுறை என்பதால் அதிக எண்ணிக்கையிலானோர் கடல் பகுதிக்கு செல்கின்றனர். இதில் அநேகர் சிறுவர்களாவர்.

எனவே, அப்பகுதியில் நீராடுபவர்கள் அதிக கவனத்துடன் செயல்பட வேண்டும் என்று வெள்ளவத்தை பொலிஸார் அறிவித்துள்ளனர்.

(ஐ)

# மீன்பிடி துறைமுகத்தில் பெண்ணின் சடலம் மீட்பு

*கொழும்பு, ஜன. 29*

அம்பாந்தோட்டை - தங்காலை மீன்பிடி துறைமுகத்துக்கு அண்மித்த கடலில் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக தங்காலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இந்தச் சடலம் மீட்கப்பட்டது. அத்துடன், ரன்னதலுன்ன பிரதேசத்தில் வசிக்கும் 32 வயதுடைய ஒரு பிள்ளையின் தாய் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவரின் மரணம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பாலியல் துஷ்பிரயோகம்; 167 சிறுமிகள் கருத்தரிப்பு!

*கொழும்பு, ஜன. 29*

நாட்டில் கடந்த ஆண்டு பாலியல் துன்புறுத்தல் உள்ளடங்கலாக சிறுவர்களுக்கெதிராக 5 ஆயிரம் குற்றச் செயல்கள் பதிவாகியுள்ளன. இவற்றில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குற்றச் செயல்கள் பாலியல் துன்புறுத்தல்களுடன் தொடர்புடையவையாகும் என பொலிஸ் தலைமையகத்தின் மகளிர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு பிரிவின் பொறுப்பதிகாரி பிரதி பொலிஸ்மா அதிபர் ரேணுகா ஜயசுந்தர தெரிவித்தார்.

இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளானவர்களில் 167 சிறுமிகள் கர்பந்தரித்துள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

2023ஆம் ஆண்டில் சிறுவர்களை கொலை செய்தல், கொலை முயற்சி, காயப்படுத்தல், பாலியல் துஷ்பிரயோகம், கடத்தல் உள்ளிட்ட 3,074 குற்றச்செயல்கள் பதிவாகியுள்ளன. இவை தவிர பாலியல் துன்புறுத்தல் உள்ளிட்ட 1,463 சிறு குற்றச் செயல்களும் பதிவாகியுள்ளன. இவ்வாறு பாலியல் துன்புறுத்தல் உள்ளடங்கலாக கடந்த ஆண்டு சுமார் 5,000 குற்றச் செயல்கள் பதிவாகியுள்ளன.

ஏனைய குற்றச் செயல்கள் கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் பெருமளவில் அதிகரிக்காத போதிலும், பாலியல் குற்றச் செயல்கள் அதிகரித்த போக்கினையே காணபிக்கின்றன.

அதற்கமைய 18 வயதுக்குட்பட்ட சிறுமிகளுக்கெதிரான 1,502 பாலியல் துஷ்பிரயோகங்களும், சிறுவர்களுக்கெதிரான 584 பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகங்களும், சிறுவர்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்தல் தொடர்பில் 70 குற்றச் செயல்களும் பதிவாகியுள்ளன.

இவ்வாறான பாலியல் துஷ்பிரயோகங்களின் போது 167 சிறுமிகள் கருத்தரித்துள்ளனர். இவர்களில் 127 பேர் தமது காதலர்களால் இந்நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான நிலைக்கு உள்ளாகும் பெரும்பாலான சிறுமிகளின் குடும்பப் பின்னணி இதில் பெருமளவு தாக்கம் செலுத்துகின்றது.

சில சந்தர்ப்பங்களில் 18 வயதுக்குட்பட்ட சிறுமிகள் காதல் உறவைப் பேணுவதற்கு அவர்களது பெற்றோரால் எவ்வித எதிர்ப்புகளும் வெளியிடப்படாமையும் இனங்காணப்பட்டுள்ளது. பெற்றோர்களுக்கிடையிலான பிளவுகளும் சிறுவர்கள் இவ்வாறு தவறான வழிகளில் செல்வதில் தாக்கம் செலுத்துகின்றது. தற்போது பொலிஸ் திணைக்களத்தின் கீழுள்ள 607 பொலிஸ் நிலையங்கள் காணப்படுகின்றன.

அவற்றில் 605 பொலிஸ் நிலையங்களில் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு காணப்படுகிறது. இவை தவிர தேசிய மட்டத்தில் நிறுவப்பட்டுள்ள மகளிர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு பிரிவினால் பல்வேறு விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய அப்பிரிவினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 109 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து சிறுவர்களுக்கெதிரான துன்புறுத்தல்கள் தொடர்பான தகவல்களை வழங்க முடியும். இதன் மூலம் கிடைக்கப்பெறும் தகவல்களின் இரகசியத்தன்மை நிச்சயம் பேணப்படும்.

அதே போன்று தகவல் வழங்குபவர்களின் தனித்துவத்தன்மையும் பாதுகாக்கப்படும். எனவே தமது பெற்றோர் அல்லது பாதுகாவலரிடம் கூற முடியாத, பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடளிக்க முடியாத சிறுவர்கள் இந்த அவசர தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தமது பிரச்னைகளை தெரிவிக்க முடியும் - என்றார்.

# போதைப்பொருளுக்கு அடிமையானோர் குறித்து தகவல் வழங்க அவசர தொலைபேசி இலக்கம்

*கொழும்பு, ஜன. 29*

போதைப்பொருள் மற்றும் அபாயகரமான போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை அளித்தல், புனர்வாழ்வளித்தல் மற்றும் ஆலோசனை வழங்கல் உள்ளிட்ட சேவைகளுக்காக அபாயகரமான மற்றும் விஷத்தன்மையுடைய போதைப்பொருள் பயன்பாட்டைத் தடுப்பதற்கான செயலணியினால் அவசர தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை அபாயகரமான மற்றும் விஷத்தன்மையுடைய போதைப்பொருள் பயன்பாட்டைத் தடுப்பதற்கான செயலணியின் தலைவராக செயல்படும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா தலைமையில் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் 1927 என்ற குறித்த அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கடற்படை தளபதி மேலும் தெரிவிக்கையில்-

விஷத்தன்மையுடைய மற்றும் அபாயகரமான போதைப் பொருட்களை நாட்டுக்குள் கொண்டு வருதல் மற்றும் அவை விற்பனை செய்யப்படுதல் என்பவற்றை கட்டுப்படுத்துவதற்காகவும், போதைப் பொருள் பாவனையை தடுப்பதற்காகவும், அதற்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிப்பத்து சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கு பங்களிப்பதற்கு இந்த செயலணி நிறுவப்பட்டது.

11 அமைச்சுக்கள் மற்றும் 14 திணைக்களங்கள் இந்த செயலணியில் அங்கத்தவர்களாக உள்ளன. அதற்கமைய போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் தொடர்பில் இந்த இலக்கத்துக்கு தகவல்களை வழங்க முடியும். இவ்வாறு தகவல் வழங்குபவர்களின் விவரம் பாதுகாக்கப்படும் - என்றார்.

(அ)

# சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட இலங்கை மீன்பிடி படகு!

*கொழும்பு, ஜன. 29*

சோமாலிய கடற்கொள்ளையர்களால் இலங்கை மீன்பிடி படகு ஒன்று கடத்தப்பட்டுள்ளமை தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளதாக கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரபிக்கடலில் மீனவர்களுடன் சென்று கொண்டிருந்த இலங்கை மீன்பிடிப் படகே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த 12ஆம் திகதி சிலாபம், திக்கோவிட்ட மீன்பிடி துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட 'லொரென்சோ சோன் 04' என்ற மீன்பிடி படகையும் 6 மீனவர்களையும் சோமாலிய கடற்கொள்ளையர்கள் கடத்திச் சென்றுள்ளனர்.

(அ)

# விபத்தில் சிறுவன் பலி!

*கொழும்பு, ஜன. 29*

லொறி - மோட்டார் சைக்கிள் விபத்தில் சிறுவன் ஒருவர் உயிரிழந்தார்.

பொலநறுவை - தம்பாளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் 17 வயது சிறுவனே உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் சென்ற சிறுவனை லொறி மோதி இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# அடுத்த மாதம் இலங்கை வரும் தாய்லாந்து பிரதமர்

*கொழும்பு, ஜன. 29*

தாய்லாந்தின் பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் அடுத்த மாதம் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது அவர் இலங்கையுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் உத்தியோகபூர்வமாக கைச்சாத்திடவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்காக பெப்ரவரி 3 ஆம் திகதி அவர் இலங்கைக்கு வருவார்.

அதேநேரம் ஸ்ரேத்தா தவிசின், காலிமுகத்திடலில் பெப்ரவரி 4 ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கையின் 76 ஆவது சுதந்திர தின நிகழ்வுகளில் விசேட அதிதியாக கலந்து கொள்ளவும் உள்ளார்.

இரு தரப்பு வர்த்தகத்தை 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிக்கும் எதிர்பார்ப்புடன் இலங்கை தாய்லாந்துடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் பெப்ரவரி 3 ஆம் திகதி கைச்சாத்திடவுள்ளது.

இலங்கையில் இருந்து தாய்லாந்திற்கு குறிப்பாக இரத்தினங்கள், நகைகள், தேயிலை மற்றும் விவசாயப் பொருட்கள் ஏற்றுமதியை மேம்படுத்துவதற்கு புதிய ஒப்பந்தம் வழிவகுக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

(அ)

## நாகபட்டினம்...

வந்தடைந்த நிலையில் படகு சேவையின் உத்தியோகபூர்வ அறிமுகம் நடைபெற் றது. இதன்மூலம் 40 வருட இடை வெளிக்குப் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையிலான படகு சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பி டத்தக்கது.

இதேவேளை, நாகபட்டினத் திலிருந்து காங்கேசன்துறை துறை முகத்துக்கு ஏறக்குறைய நான்கு மணித் தியாலங்கள் ஆகும். ஒரு வழி பயணத் துக்கு 26 ஆயிரத்து 750 இலங்கை ரூபாயும் இரு வழி பயணத்துக்கு 53 ஆயிரத்து 500 ரூபாயும் செலவாகும் என்றும் தெரிய வருகின்றது. (ஐ)

## இலங்கை...

தெரிவித்து கடந்த நவம்பர் 10ஆம் திகதி ஐ. சி. சி. தடை விதித்தது. தடையின் பின்னர் இலங்கை கிரிக்கெட் சபையை ஐ. சி. சி. கண்காணித்து வந்தது. இந்த நாட்களில் விதிகளை இலங்கை கிரிக் கெட் மீறவில்லை என்பதில் திருப்தி அடைவதாகவும் அந்த அமைப்பு தெரிவித்தது.

எனினும், இந்த இடைநிறுத்தத்தால் தற்போது நடைபெற்று வரும் 19 வய துக்கு உட்பட்டோருக்கான உலகக் கிண் ணம் தென்னாபிரிக்காவுக்கு மாற்றப்பட் டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சர்வதேச...

சர்வதேச நீதிமன்றம் நிறுத்துமாறு உத்தரவிடவில்லை. இந்த நிலையி லேயே கடற்றொழில் அமைச்சர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த 14 வருடங்களுக்கு மேலாக சர்வதேச நீதிமன்றத்தின் ஊடாக தமிழ் மக்களுக்கு நீதி பெற்றுத் தரப்படும் என்ற கோஷங்களை சில தமிழ் தரப்பு கள் மக்கள் மத்தியில் விதைத்து வருகின் றன.

குறிப்பாக இறுதிப் போரின்போது இடம்பெற்ற உயிரிப்புகளுக்கான நீதி மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோருக் கான பரிகாரம் போன்றவற்றை சர்வதேச நீதிமன்றத்தின் மூலமே பெற்றக் கொள்ள முடியும் எனவும் உள்நாட்டு பொறி முறையில் நம்பிக்கை கொள்ள முடியாது எனவும் சொல்கின்ற தமிழ் அரசியல் தரப்புகள், தமிழ் மக்கள் மத்தியில் சர்வதேச நீதிமன்றம் தொடர்பான மாயையை ஏற்படுத்தி இருக்கின்ற னர்.

தற்போது, இஸ்ரேல் விவகாரத்தில் தென்னாபிரிக்காவால் சர்வதேச நீதிமன் றில் தொடரப்பட்ட வழக்குக்கு வழங்கப் பட்டுள்ள தீர்ப்பானது, சர்வதேச நீதிமன்றின் சிந்தனை மற்றும் பார்வை எத்தகையது என்பதை வெளிப்படுத்தி யிருக்கின்றது.

ஆயிரக்கணக்கான மக்களை தினமும் அழித்துக் கொண்டிருக்கிற தாக்குதல்க ளை நிறுத்துமாறு உலகின் அதியுச்ச நீதிமன்றக் கட்டமைப்பான சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உத்தரவிட வில்லை. இனப்படுகொலை மற்றும் யுத்தக் குற்றம் தொடர்பான சர்வதேச நியமங்களை மதித்து நடக்குமாறு சொல்லியிருக்கிறது.

காஸாவில் குறுகிய பிரதேசத்தில் பல இலட்சம் அப்பாவி மக்கள் செறிந்து வாழ்கிறார்கள் என்பதோ, தாக்குதல் தொடர்ந்தால் அப்பாவி மக்களின் அழிவுகள் தவிர்க்க முடியாதவை என்பதோ சர்வதேச நீதிமன்றத்துக்கு தெரியாத சமாச்சாரங்கள் இல்லை. அப்படியிருந்தும் தாக்குதலை நிறுத்து மாறு தீர்ப்பில் சொல்லப்படவில்லை.

இவ்வாறான சம்பவங்கள் ஊடாக, சர்வதேச கட்டமைப்புகளின் மனோ நிலையையும் அவற்றின் நிகழ்ச்சி நிரல் கள் எத்தகையவை என்பதையும் எமது மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# இலங்கை வங்குரோத்தடைந்த நாடு என்பது உண்மைக்கு புறம்பானது!

### மத்திய வங்கி ஆளுநர்

கொழும்பு, ஜன. 29

இலங்கை வங்குரோத்து நாடாக மாறியுள்ளதாகக் கூறப்படும் அனைத்துக் கூற்றுகளும் உண்மைக்குப் புறம்பானது என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் வங்குரோத்து நிலை குறித்து விசாரிக்கும் நாடாளுமன்றக் குழு முன் சாட்சியமளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை வங்குரோத்து நிலையில் உள்ளதாக கூறப்படுவதை நான் முற்றாக நிராகரிக்கிறேன். கடந்த ஆண்டு நடந் தது நாட்டின் திவால் நிலை அல்ல என் றும், சில தேர்ந்தெடுக்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களின் தீர்வை ஒத்திவைப்பதே தவிர வேறில்லை.

உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு தொடர்பிலான உண்மைகளை மேலும் தெளிவுபடுத்தியுள்ள மத்திய வங்கி யின் ஆளுநர், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை முழுமையாக ஆராய்ந்ததாகவும் அதில் திவால் பிரகடனம் இடம்பெற வில்லை.

ஆனால், இந்த வழக்கின் தீர்ப்பானது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார அசௌகரியங்கள் தொடர்பில் நீண்ட விளக்கத்தை வழங்கியுள்ளதாகவும் மத் திய வங்கியின் ஆளுநர் குறிப்பிட்டி ருந்தார்.

## இனப்...

இராணுவ நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என்று ஐ. சி. சி. உத்தரவிட வில்லை.

இஸ்ரேல் இனப்படுகொலைகளில் ஈடுபடுகிறது என்று கூறி தென்னா பிரிக்கா தாக்கல் செய்த மனுவை ஆராய்ந்த சர்வதேச நீதிமன்றம் (ஐ. சி. சி) தனது உத்தரவை வெளியிட்டுள்ளது.

அதில், இனப்படுகொலை என்பதற் குள் அடங்கக்கூடிய அனைத்துவகை யான நடவடிக்கைகளையும் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை இஸ்ரேல் எடுக்கவேண்டும். இஸ்ரேலிய படையினர் இனப்படுகொலைகள் என கருதப்படும் நடவடிக்கைகளில் ஈடுபடு வதை இஸ்ரேல் தடுத்து நிறுத்த வேண் டும் என நீதிபதி ஜோன்டொனோகு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் நடவடிக்கைகள் தொடர்பிலான நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பு இதுவல்ல என்ற போதிலும் பலஸ்தீனியர்கள் இனப்படுகொலை ஆபத்தை எதிர்கொள்கின்றனர் எனத் தங்களின் கருத்தையும் நீதிபதிகள் பதிவு செய்தனர். (ஐ)

## தமிழ்...

சிவஞானம் சிறீதரன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில், சிறீதரன், மாவை சேனாதிராசாவுடன் சுமந்திரன் எம். பி யும் பங்கேற்றிருந்தார். ஆனால், அவர் விவகாரத்தில் இணக்கமின்றி வெளியேறி னார் என்றும் தெரிகின்றது. கட்சியின் தலைமைப் பொறுப்பைதாம் இன்னுமே ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் கட்சித் தலைவராக மாவை சேனாதிராசாவே தொடர்கின்றார் என்றும் சிறீதரன் மேலும் தெரிவித்தார்.

“இரண்டு தரப்புகளுக்கு இடையி லும் கொதிநிலை நிலவுகிறது. ‘வெட்டு ஒன்று ண்டு இரண்டாக’ முடிவு எடுக்க முடியாத நிலைமை உள்ளது. எல்லோ ரையும்சமாளித்து, அரவணைத்து, ஓர் இணக்கமான முடிவை காண வேண்டி இருப்பதால் சம்பந்தப்பட்ட தரப்புக ளோடு நான் நேரடியாகப் பேசவுள் ளேன். அதற்காக சற்றுக் காலம் இந்த விடயத்தில் முடிவெடுப்பதைத் தள்ளிப் போடத் தீர்மானித்துள்ளோம். செயலா ளர் பதவி விடயத்தில்தான் இழுபறி நீடிக்கின்றது. அதுவும் திருகோணமலை - மட்டக்களப்புத் தரப்புகளுக்கு இடை யிலான சிக்கலாக உள்ளது. இரு தரப்பு களும் விட்டுக் கொடுத்து, செயலாளர் பதவியை கால அளவீட்டில் பங்கிட்டு, ஏதேனும் இணக்கத்துக்கு வரமுடியுமா என்றும் பார்க்கின்றோம்.

இந்தப் பிரச்னைக்கு தீர்வுகாண எங்களுக்கு கால அவகாசம் தேவைப்படு கிறது. மாவை சேனாதிராசா அடுத்து வரும் நாள்களில் சிங்கப்பூர் செல்கின் றார். அவர் பெப்ரவரி 10ஆம் திகதிக்குப் பின்னர் நாடு திரும்புவார். அதன் பின் னர் இந்தப் பிரச்னை பற்றி ஆராய்ந்து ஒரு முடிவெடுப்போம். அதுவரை தற்போதுள்ள நிலைமை அப்படியே தொடரும்.” - என்றும் சிறீதரன் எம். பி. கூறினார். (ஐ)

## சொத்து...

இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு கடும் உத்தரவு பிறப்பித் துள்ளது.

சமீபத்தில் இயற்றப்பட்ட இலஞ்சம் - ஊழல் குற்றச் சட்டத்தின்படி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், அரசியல்வாதிகள், அரச ஊழியர்கள் மற் றும் ஊடகத் தலைவர்கள் அடங்கிய சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் நபர் கள் வருடாந்தம் விரிவான சொத்து மற் றும் பொறுப்பு அறிக்கைகளை இலஞ்ச அல்லது ஊழல்குற்றச்சாட்டுகள் ஆணைக் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 31ஆம் திகதிக்குள் அவர்கள் தமது சொத்துப் பட்டியலை அளிக்க வேண்டும். இதன் படி, இலஞ்சம் மற்றும் ஊழல் சார் சோதனைகளின்போது வருமானத்துக்கு மேல் சொத்துகள் சிக்கினால் அவர்க ளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## வீடு சின்னம்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இணைந்து செயலாற்ற தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த நிலையில், அவருக்கு பதிலளிக் கும் விதமாக நேற்றைய தினம் முன்னாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்கா ளிக் கட்சிகளின் தலைவர்கள் வெவ் வேறு இடங்களில் நடத்திய செய்தியா ளர் சந்திப்புகளில் மேற்கண்ட விடயங் களைத் தெரிவித்தனர்.

**புளொட் தலைவர் சித்தார்த்தன்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்பட வேண்டும், பொதுச் சின் னத்தை ஏற்க வேண்டும் - அது வீடு சின் னமாகவும் இருக்கலாம். இவற்றை ஏற் றால் இலங்கை தமிழ் அரசு கட்சியுடன் இணைந்து மீளவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயல்பட முடியும். எனினும், அதற்கு முன்பதாக இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிளவு சரி செய்யப்பட வேண்டும். இதன் பின்னரே அந்தக் கட்சி ஏனைய கட்சிக ளுடன் கூட்டுச் சேர்வது தொடர்பில் பேச வேண்டும்.

மீண்டும் ஒற்றைத் தலைமையின் கீழ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயல் படுவது சாத்தியப்படாது. முன்னர், இரா. சம்பந்தனின் கீழ் அனைவரும் ஒன்றிணைந்தோம். ஆனால், அக்காலத் தில் ஏற்பட்ட சில கசப்புகள் ஏற்பட்டன. அவ்வாறான சம்பவங்கள் மீண்டும் நிகழாதிருக்க கூட்டுத் தலைமை அவ சியம் - தற்போது ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியில் 5 கட்சிகளின் தலைவர்களும் அவ்வாறே செயல்பட்டு வருகின்றோம் - என்றார்.

**ரெலோ தலைவர் செல்வம்**

இதேசமயம், ரெலோ தலைவரும் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப் பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவிக்கையில்,

ரெலோவை பொறுத்தவரையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக் கத்தின்போதே அதன் ஆரம்ப கட்சிக ளில் ஒன்றாகப் பங்கெடுத்திருந்தது. அன்றுமுதலே நாம் ஐக்கியத்துக்காக தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகின்றோம்.

ஆனால், தமிழ் மக்களுக்காக அர சியல் கட்சிகளிடையே ஏற்படுகின்ற ஐக்கியமானது, அந்தந்த அரசியல் கட்சி களுக்கு சம அந்தஸ்தை வழங்குவதாக இருப்பது மிகவும் முக்கியமானது. குறிப் பாக கூட்டமைப்பின் ஜனநாயகத் தன்மை, மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை உறுதி செய்வதாக இருக்க வேண்டும்.

கடந்த காலத்தில் நாம் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவு செய்ய வேண்டும் என்றும் அதற்கு ஒரு பொதுவான சின்னம் ஏற்படுத்தப் பட வேண்டும் என்றும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தோம். தற்போதும் அவ்விதமான நிலைப்பாட்டிலேயே உள்ளோம். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வீட்டுச் சின்னத்தை விட்டுக் கொடுப்பதற்கு தயாரில்லாத மனநிலை யைக் கொண்டிருக்குமாயின், அந்தத் தரப்பினர் அதனை பொது சின்னமாக ஏற்றுக்கொள்வதற்காகவாவது நெகிழ் வுத்தன்மையுடன் தீர்மானங்களை எடுக்க வேண்டும் - என்றார்.

**ரெலோ செயலர் கருணாகரம்**

இதேநேரம், ரெலோவின் பொதுச் செயலாளர் கோவிந்தன் கருணாகரம் எம். பி. மட்டக்களப்பில் நேற்று செய்தி யாளர்களை சந்தித்தபோது,

தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் கட்சி கள் சிதைந்து சின்னாபின்னமாகி இன்று தமிழர்களுக்கு என்று ஒரு நிரந்தர மான, உறுதியான தலைமை அற்ற நிலைமை யில் இருக்கின்றோம்.

இலங்கை தமிழ் அரசு கட்சி இன்று ஒரு மோசமான நிலையில் இருக்கின்றது தமிழ் மக்களின் நிலையை கருத்தில் கொண்டு இவர்கள் ஒற்றுமையாக செயல்பட வேண்டும். ஒற்றுமையாக செயல்படுவது மாத்திரமல்ல அவர்க ளின் கட்சிக்குள்ளே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இவர்கள் பலப்படுத்த வேண்டும் - என்றார்.

**ஈ. பி. ஆர். எல். எவ். சுரேஷ்**

இதேபோன்று, ஈ. பி. ஆர். எல். எவ் வின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப் பில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலி ருந்து தமிழ் அரசுக் கட்சியே வெளி யேறியது. ஏனைய கட்சிகள் வெளி யேறுவதற்கும் அந்தக் கட்சியே காரண மாக அமைந்திருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது 22வருட காலமாக தமிழ் மக்களுக்காகப் போராடும் ஓர் அரசியல் கூட்டாக தன்னை நிறுவனப்படுத்திக் கொள்ளா மல், தேர்தல் காலங்களில் கூட்டாகவும் பின்னர் தமிழ் அரசுக் கட்சியாக முடி வெடுத்துச் செயல்படுவதுமே தொடர் கதையாக இருக்கின்றது. இந்த நிலையில் தான் இறுதியாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலத்தில் தமிழ் அரசுக்கட்சி யின் தனிவழி தீர்மானத்தின் பின்னர் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி உரு வாக்கப்பட்டது.

அதில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சி களும் தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள அனைத்து கட்சிகளையும் ஒன்றி ணைத்து தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராடும் ஒருவலுவான அமைப்பை உருவாக்க வேண்டும் என்பதில் தீர்க்கமான சிந்தனையுடன் பயணிக்கின்றன.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில், புதிய புதிய அமைப்புகள் தொடர்பாக சிந்திப்பதை விடுத்து, ஏற்கனவே செயல் பட்டுக் கொண்டிருக்கும் ஐக்கிய முன்ன ணியில் தமிழ் அரசுக் கட்சியும் தமிழ்த் தேசியப் பரப்பில் செயல்பட்டுக்கொண் டிருக்கும் ஏனைய கட்சிகளும் இணைந்து செயல்பட வேண்டும் அதற்கானதோர் உரையாடலை ஆரம்பிப்பதே பொருத்த மான நகர்வாக இருக்கும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இனவாத, மதவாத, குடும்ப அரசியலில் இருந்து இளைஞர்கள் விடுபடவேண்டும்

## முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர்



மட்டக்களப்பு, ஜன. 29

**எதிர்காலத்தில் இலஞ்சம் மற்றும் ஊழலற்ற தூய்மையான அரசியல் கலாசாரத்துக்கு இளைஞர்களை தயார்படுத்துவதுடன் இனவாத, மதவாத, குடும்ப அரசியலில் இருந்து விடுபட்டு ஒரு தூய்மையான ஜனநாயக கலாசாரத்தை இளைஞர்களுக்கு இடையில் வளர்த்தெடுக்க வேண்டும் - இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும் முன்னாள் தேர்தல் ஆணையாளருமான மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.**

ஜனநாயக இளைஞர் காங்கிரஸ் அமைப்பினர் ஏற்பாடு செய்த மாகாண சபைகளை வலுப்படுத்தல் தொடர்பாக இளைஞர், யுவதிகளுக்கு விளக்கமூட்டும் செயலமர்வு மட்டக்களப்பில் நேற்று நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனநாயக இளைஞர் காங்கிரஸ் தலைவர் கே. அர்ஜூனா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பெரும் எண்ணிக்கையிலான இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டனர். எதிர்கால இளைஞர்களின் அரசியலில் அவர்களது பங்களிப்பு மற்றும் தேர்தல்களின் முக்கியத்துவம் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது. (ஐ)

# விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 29

விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் மன்னார் - வெள்ளாங்குளம் - கணேசபுரம் பகுதியை சேர்ந்த பழனி பரஞ்சோதி (வயது 43) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.


சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

குறித்த நபர் கடந்த 24ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் வீட்டுக்கு சென்றுகொண்டிருந்தவேளை இரண்டு டிப்பர்கள் ஒன்றுடன் ஒன்று மோதின. இதன்போது இவர் டிப்பருக்கு பின்னால் மோதி விபத்தில் சிக்கினார்.

இந்நிலையில் அவர் மாங்குளம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் அங்கிருந்து கிளிநொச்சி மருத்துவமனைக்கும் பின்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கும் மாற்றப்பட்டார்.

இந்நிலையில், சிகிச்சை பலனின்றி அவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார். அவரின் மரணம் தொடர்பான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஐ)

# இணுவிலை சேர்ந்த இளைஞரை இரு நாட்களாகக் காணவில்லை!



யாழ்ப்பாணம், ஜன. 29

இணுவிலைச் சேர்ந்த 27 வயது இளைஞர் ஒருவரை காணவில்லை என அவரின் உறவினர்களால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 26 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் குறித்த இளைஞன் காணாமல் போனார் என்று அவரது உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இளைஞர் காணாமல் போன தினத்தில் மஞ்சள் நிற ரீசேர்ட், கறுப்பு நிற அரைக்காற்சட்டை அணிந்திருந்தார். என்றும் இவரைப் பற்றிய தகவல் அறிந்தாலோ அல்லது இவரை எங்காவது கண்டாலோ சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது இளைஞரது உறவினர்களது தொலைபேசி இலக்கங்களான 077-2690673 அல்லது 077-6523229 அறிவிக்குமாறு உறவினர்கள் கேட்டுள்ளனர். (ஐ)

# வீதியில் நடந்து சென்ற இளைஞர் திடீரென மயங்கிவீழ்ந்து மரணம்!

## கீரிமலையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 29

நடந்து சென்றுகொண்டிருந்த இளைஞர் திடீரென மயங்கி வீழ்ந்து அந்த இடத்திலேயே உயிரிழந்தார். இந்த சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை கீரிமலையில் இடம்பெற்றுள்ளது.

இதில், முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு உடையார் கட்டு பிரதேசத்தை தனபாலசிங்கம் சிந்துஜன் (வயது 19) என்பவரே உயிரிழந்தார்.

குறித்த இளைஞர் கீரிமலையில் தங்கியிருந்து வேலை பார்த்து வந்துள்ளார். இந்த நிலையில், தேவை ஒன்றின் பொருட்டு நடந்து சென்றுகொண்டிருந்த போது திடீரென வாந்தி எடுத்துள்ளார். இதையடுத்து, மயங்கி வீழ்ந்து மரணமானார்.

தெல்லிப்பழை மருத்துவமனையில் அவரின் உடலம் ஒப்படைக்கப்பட்டது. பிரேத பரிசோதனையில் உயிரிழப்புக்கான காரணம் தெளிவாக தெரியவரவில்லை. இதையடுத்து அவரின் உடல் மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சடலத்தை அடக்கம் செய்யுமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ஐ)

# 28 ஆயிரம் முன்பள்ளி ஆசிரியர்கள் முறையான பயிற்சி இல்லாதவர்கள்

## கல்வி அமைச்சர் சுசில்



கொழும்பு, ஜன. 29

நாட்டின் முன்பள்ளி கட்டமைப்பில் முறையாகப் பயிற்சி பெற்ற 6,000 ஆசிரியர்கள் மாத்திரமே உள்ளனர் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

19 ஆயிரம் முன்பள்ளிகளில் 34 ஆயிரம் ஆசிரியர்கள் முன்பிள்ளை பருவ அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள போதிலும் அவர்கள் முறையான பயிற்சிகள் எதனையும் பெறவில்லை - எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, தற்போது முன்பிள்ளை பருவ அபிவிருத்திக்காக இயங்கிவரும் அனைத்து முன்பள்ளிகளும் தேசிய கல்விக் கொள்கைக்கு அமைவாக பொதுவான கட்டமைப்பில் நடைமுறைப்படுத்தப்படும் - என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

# கிரிக்கெட் சபை மீதான தடை நேற்றுடன் நீங்கியது!

கொழும்பு, ஜன. 29

இலங்கைமீதான சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி) தடை நேற்று நீக்கப்பட்டது என்று விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நிர்வாகத்தில் அரசியல் இருப்பதாகத் தெரிவித்து சர்வதேச கிரிக்கெட் சபை இலங்கை கிரிக்கெட் சபையை தடை செய்திருந்தது.

கடந்த சில மாதங்களாக இந்தத் தடை நீடித்து வந்த நிலையில், நேற்றுடன் இந்தத் தடை நீக்கப்பட்டதாக விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தனது எக்ஸ் தளப் பதிவில் தெரிவித்தார். (ஐ)

# நிஷாந்தவின் உடல் நல்லடக்கம் முக்கிய தலைவர்கள் பங்கேற்பு!



சிலாபம், ஜன. 29

அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் பூதவுடல் நேற்று ஞாயிற்றுக்கிழமை புத்தளம் - சிலாபம் - ஆராய்ச்சிகட்டு - ராஜக தளுவ தேவாலய சேமக்கலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

நேற்று நடந்த இறுதி அஞ்சலி நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பிரதமர் தினேஷ் குணவர்த்தன, சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன, பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சிறீ லங்கா பொது ஜன பெரமுன கட்சியினர் பங்கேற்றனர்.

இறுதி அஞ்சலியின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அனுதாப செய்தி வாசிக்கப்பட்டது. இதேபோன்று, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த நிகழ்வில் பங்கேற்கவில்லை. அவரின் அனுதாப செய்தியை நாமல் ராஜபக்ஷ எம். பி. வாசித்தார்.

சனத் நிஷாந்தவின் இறுதிப் பயணத்தில் பெருமளவிலான பொது மக்களும் பங்கேற்றனர். பாதுகாப்பு பணியில் பெருமளவிலான பொலிஸாரும் ஈடுபட்டிருந்தனர்.

கட்டுநாயக்க அதிவேக வீதியில் வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த மற்றும் அவரின் பாதுகாப்பு உத்தியோகத்தர் உயிரிழந்தனர் - என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிறப்பாக செயல்பட்ட பொலிஸாருக்கு வெகுமதி!

யாழ்ப்பாணம், ஜன. 29

யாழ். மாவட்டத்தில் சிறப் பாக கடமையாற்றி குற்றச் செயலுடன் தொடர்புடையோரை கைதுசெய்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வெகுமதி வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் யாழ்ப்பாண பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதி காரிகள் கலந்து கொண்டனர். (ஐ-03)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இந்தியாவுடனான டெஸ்ட்; இங்கிலாந்து த்ரில் வெற்றி!




ஹைதராபாத், ஜன. 29

இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 28 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து சுழல்பந்து வீச்சாளர் 7 விக்கெட்களை கைப்பற்றி அசத்தியிருந்தார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியா சென்று ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இரு அணிக ளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி ஹைதராபாத்தில் கடந்த 25ஆம் திகதி தொடங்கியது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. முதல் இன்னிங்ஸில் 246 ஓட்டங்களுக்கு இங்கிலாந்து சகல விக்கெட்களையும் இழந்தது. அந்த அணியின் தலைவர் பென் ஸ்ரோக்ஸ் 88 பந்துகளில் 70 ஓட்டங்கள் எடுத்தார்.

தொடர்ந்து முதல் இன்னிங்ஸில் ஆடிய இந்திய அணி 436 ஓட்டங் களுக்கு ஆட்டமிழந்தது. ஜெய்ஸ் வால், கே.எல்.ராகுல் மற்றும் ஜடேஜா என மூவரும் தலா 80 ஓட் டங்களுக்கு மேல் எடுத்தனர். பரத் 41 ஓட்டங்களும், அக்சர் பட்டேல் 44 ஓட்டங்களும் எடுத்தனர். இதன் மூலம் முதல் இன்னிங்ஸில் 190 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது.

இங்கிலாந்து அணி இரண்டா வது இன்னிங்ஸில் 420 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணியின் முதல் வரிசை துடுப்பாட்ட வீரர் ஒல்லி போப் 196 ஓட்டங்கள் எடுத்தார். பென் போக்ஸ், ரெஹான் அகமது மற்றும் ரொம் ஹார்ட்லி ஆகியோர் அவருக்கு துணை செய்தனர். இந் தப் போட்டியில் இந்தியா வெற்றி பெற 231ஓட்டங்கள் இலக்கு நிர் ணயித்தது.

இந்திய அணியின் முதல் வரிசை துடுப்பாட்ட வீரர்கள் பெரிய இணைப்பாட்டத்தை அமைக்க வேண்டிய சூழல் இருந்தது. போட்டியை வர்ணனை செய்த முன்னாள் இந்திய வீரர்கள், இங்கி லாந்து அணியின் அனுபவம் இல் லாத சுழல்பந்து வீச்சை சுட்டிக் காட்டினர். இத்தகைய சூழலில் ஜெய்ஸ்வால், கில், அணித்தலைவர் ரோகித் சர்மா மற்றும் அக்சர் பட்டேல் என இந்தியாவின் முதல் நான்கு விக்கெட்களை கைபற்றி அசத்தினார் சுழற்பந்து வீச்சாளர் ரொம் ஹார்ட்லி. 24 வயதான அவ ருக்கு இதுதான் அறிமுக டெஸ்ட் போட்டி. அவர் இடது கை சுழல் பந்து வீச்சாளர். தொடர்ந்து ராகுல் விக்கெட்டை ரூட் கைப்பற்றினார். ஜடேஜா 2 ஓட்டங்களில் ரன் அவுட் ஆனார்.

7 விக்கெட்கள் இழப்புக்கு 119 ஓட்டங்கள் எடுத்திருந்தது இந்தியா. அந்த நிலையில் கே. எஸ். பரத் மற்றும் அஸ்வின் கூட்டணி அமைத்தனர். இருவரும் 57 ஓட்டங் கள் சேர்த்தனர். பரத் மற்றும் அஸ் வின் என இருவரும் தலா 28 ஓட் டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். அவர்கள் இருவரின் விக்கெட்டை யும் ஹார்ட்லி வீழ்த்தினார்.

இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு ஒரே ஒரு விக்கெட் மட் டுமே தேவைப்பட்ட காரணத்தால் நான்காம் நாளின் ஆட்ட நேரம் கூட்டப்பட்டது. களத்தில் சிராஜ் மற்றும் பும்ரா இணைந்து 25 ஓட்டங்கள் சேர்த்தனர். சிராஜ் விக்கெட்டையும் ஹார்ட்லி வீழ்த்த இரண்டாவது இன்னிங்ஸில் 202 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்க ளையும் இழந்தது இந்தியா.

இதன் மூலம் 28 ஓட்டங்களில் இங்கிலாந்து வெற்றி பெற்றது. ஹார்ட்லி, 26.2 ஓவர்கள் வீசி 62 ஓட்டங்கள் கொடுத்து 7 விக்கெட் களை கைப்பற்றினார். இந்தப் போட்டியில் மொத்தமாக 9 விக் கெட்களை அவர் கைப்பற்றி அசத்தினார். 5 போட்டிகள் கொண்ட இந்த டெஸ்ட் தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது இங்கிலாந்து. (ஐ)



## அறிமுக போட்டியில் 5 விக்கெட் இங்கிலாந்து பட்டியலில் ஹார்ட்லி

ஹைதராபாத், ஜன. 29

இங்கிலாந்து அணிக்காக அறிமுக டெஸ்ட் போட்டி யிலேயே 5 விக்கெட்கள் வீழ்த்தியவர்கள் பட்டியலில் ரொம் ஹார்ட்லி இணைந்துள்ளார்.

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடை யிலான முதல் டெஸ்ட் போட்டி ஹைதராபாத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் இந்திய அணியை 28 ஓட்டங் கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இங்கிலாந்து அபார வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் இங்கிலாந்து அணியில் அறிமுக வீரராக களமிறங்கிய ரொம் ஹார்ட்லி சிறப் பான பந்துவீச்சை வெளிப்படுத்தி 9 விக்கெட்களை கைப்பற்றினார். இரண்டாவது இன்னிங்ஸில் மட்டும் அவர் 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றி இங்கிலாந்தின் வெற்றிக்கு உதவினார்.

இரண்டாவது இன்னிங்ஸில் 7 விக்கெட்களை கைப் பற்றியதன் மூலம் இங்கிலாந்து அணிக்காக அறிமுக டெஸ்ட் போட்டியிலேயே 5 விக்கெட்டுகள் வீழ்த்திய வர்கள் பட்டியலில் ரொம் ஹார்ட்லி இணைந்துள்ளார்.

இங்கிலாந்து அணிக்காக அறிமுக டெஸ்ட் போட்டி யில் 5 விக்கெட்கள் வீழ்த்தியவர்கள் (இந்த நூற்றாண் டில்)

அடில் ரஷீத் - 5/64 - பாகிஸ்தானுக்கு எதிராக - 2015, வில் ஜாக்ஸ் - 6/161 - பாகிஸ்தானுக்கு எதிராக - 2022, ரீகன் அகமது - 5/48 - பாகிஸ்தானுக்கு எதிராக - 2022, ரொம் ஹார்ட்லி - 7/62 - இந்தியாவுக்கு எதிராக - 2024.



## ஆஸி. ஓப்பன் ரென்னிஸ் சபலெங்கா சம்பியன்!

மெல்பர்ன், ஜன. 29

அவுஸ்திரேலிய ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் பெலாரஸ் வீராங்கனை அரினா சபலெங்கா சம்பியன் பட்டம் வென்றார்.

அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் இறுதிச் சுற்றில் பெலாரஸ் வீராங்கனை சபலெங்காவும், சீன வீராங்கனை ஷெங் கின்வெனும் மோதினர்.

இதில், சபலெங்கா 6-3, 6-2 என்ற நேர் செற்களில் சீன வீராங்கனை ஷெங்கை வென்று பட்டத்தைக் கைப் பற்றினார். இது இவர் வெல்லும் இரண்டாவது அவுஸ் திரேலிய ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் பட்டமாகும். (ஐ)

## ஆஸி. மண்ணில் 25 வருடங்களின் பின்னர் மேற்கிந்திய தீவு வெற்றி!

காபா, ஜன. 29

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டி யில் 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இளம் வீரர்கள் அடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி வரலாறு படைத்துள்ளது.

அவுஸ்திரேலியா மற்றும் மேற் கிந்தியத்தீவுகளுக்கு எதிரான இரண் டாவது டெஸ்ட் போட்டி கடந்த ஜனவரி 25 ஆம் திகதி காபாவில் தொடங்கியது. போட்டியின் மூன்றாம் நாளான நேற்று முன் தினம் மேற்கிந்தியத் தீவுகள் அவுஸ் திரேலிய அணிக்கு 216 ஓட்டங் களை வெற்றி இலக்காக நிர்ணயித் தது. மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் அவுஸ்தி ரேலிய அணியின் வெற்றிக்கு 156 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

இந்த நிலையில், நேற்று நான் காம் நாள் ஆட்டம் தொடங்கியது. அவுஸ்திரேலிய அணி இரண்டா வது இன்னிங்ஸில் 207 ஓட்டங்க ளுக்கு ஆட்டமிழந்தது. அபார பந்துவீச்சை வெளிப்படுத்திய மேற்கிந்தியத் தீவுகள் வீரர் ஷமர் ஜோசப் 7 விக்கெட்களைக் கைப்பற்றி அசத்தினார்.




அல்சாரி ஜோசப் 2 விக்கெட்க ளையும், ஜஸ்டின் கிரீவ்ஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இதன்மூலம் 8 ஓட்டங்கள் வித்தியா சத்தில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி டெஸ்ட் தொடரை 1-1 என்ற கணக்கில் மேற்கிந்தியத் தீவுகள் சமன் செய்தது.

கடந்த 1999 ஆம் ஆண்டுக்குப் பிறகு அவுஸ்திரேலியா மற்றும் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடர் சமனில் முடிவ டைந்துள்ளது. டெஸ்ட் போட்டி களில் 1992-93 ஆம் ஆண்டுகளுக் குப் பிறகு அவுஸ்திரேலிய மண் ணில் முதல் முறையாக மேற்கிந்தியத் தீவுகள் தோற்கடிக்கப் படவில்லை.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இந்த வெற்றியின் மூலம் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தரவரிசை யில் மேற்கிந்தியத் தீவுகள் ஓர் இடம் முன்னேறி 7ஆவது இடத்தி லுள்ளது. (ஐ)

# பீகார் முதலமைச்சர் நிதிஷ் குமார் 5ஆவது முறையாக அணி மாறுகிறாரா?

சந்தன் ஜஜ்வாடே

பீகார் தலைநகர் பட்னாவில் கடும் குளிருக்கு இடையே திடீரென அரசியல் களம் சூடு பிடித்துள்ளது. “இந்தியா” கூட்டணி மற்றும் பிகாரில் மகா கூட்டணியில் இருந்து நிதிஷ் குமார் விலகப் போகிறாரா?

பீகாரின் முன்னாள் முதல்வர் கர்பூரி தாகூரின் பிறந்தநாளான புதன்கிழமை அவருக்கு அஞ்சலி செலுத்தும் போது நிதிஷ் குமார் வாரிசு அரசியலைத் தாக்கிப் பேசினார்.

ஆயினும் எவருடைய பெயரையும் நிதிஷ்குமார் குறிப்பிடவில்லை. கர்பூரி தாகூர் தனது குடும்பத்தின் பக்கம் சாயவில்லை. ஆனால் இன்று அவர் குடும்பத்தை முன்னேற்றிக் கொண்டு செல்வதில் மக்கள் தீவிரமாக இருப்பதாக அவர் கூறியிருந்தார்.

நிதிஷ் குமாரின் இந்தக் கருத்து லாலு குடும்பத்தை குறி வைப்பதாகப் பார்க்கப்பட்டது. கர்பூரி தாகூருக்கு பாரத ரத்னா விருதை பாஜக அரசு இரண்டு நாட்களுக்கு முன்பு அறிவித்தது. இதற்காக பிரதமர் நரேந்திர மோடிக்கு நிதிஷ் குமார் நன்றி தெரிவித்திருந்தார்.

மேலும் நாளை 30ஆம் தேதி பிகார் மாநிலம் பூர்னியாவில் நடைபெறவுள்ள ராகுல் காந்தியின் பேரணியில் நிதிஷ் குமார் கலந்து கொள்ளமாட்டார் என்று வியாழக்கிழமை காலை செய்திகள் வெளியாயின.

பாரத் ஜோடோ நீதி யாத்திரையின் ஒரு பகுதியாக ராகுல் காந்தி பூர்னியா சென்றடைய உள்ளார். நிதிஷ் குமார் ராஷ்ட்ரிய ஜனதா தளத்துடன் பேரணியில் கலந்து கொள்வார் என்று ஐக்கிய தனதா தளம் முன்னதாகத் தெரிவித்திருந்தது.

“இந்தப் பேரணியில் கூட்டணி தலைவர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று அவசியமில்லை,” என இதுகுறித்துப் பேசிய ஐக்கிய தனதா தள மூத்த தலைவர் விஜய் குமார் சௌத்ரி குறிப்பிட்டார். இந்த அரசியல் திருப்பங்களுக்குப் பிறகு நிதிஷ்குமார் பாஜகவுடன் மீண்டும் கைகோர்க்க கூடும் என்ற ஊகங்கள் வலம் வரத் தொடங்கியுள்ளன.

வாரிசு அரசியல் பற்றி நிதிஷ் குமார் பேசியது கர்பூரி தாகூரை புகழ்வதற்காக மட்டுமே என்றும் அவரது அறிக்கை லாலு பிரசாத் யாதவ் பற்றியது அல்ல என்றும் ஐக்கிய தனதா தள செய்தி தொடர்பாளர் கே.சி.தியாகி கூறினார்.

பிகார் மாநில பாஜக தலைவர் சாம்ராட் சௌத்ரி செய்தியாளர்களிடம் பேசும்போது, “யாரும் யாரிடமும் பேசுவதைத் தடுக்க முடியாது,” என்றார். நிதிஷ் குமார் பாஜக கூட்டணியில் சேர்வது குறித்துக் கேட்டதற்கு, “அவை எல்லாம், மேல் மட்டத்தில் முடிவு செய்யப்படும்,” என்றார்.



பிகாரின் முன்னாள் துணை முதல்வர் சுஷில் குமார் மோதி பேசுகையில், “அரசியலில் எந்தக் கதவும் மூடப்படுவதில்லை. தேவைக்கு ஏற்ப கதவுகள் மூடவும் திறக்கவும் செய்யும்,” என்றார்.

நிதிஷ் குமார் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்குத் திரும்புவார் என்ற ஊகங்கள் குறித்து இந்தியன் எக்ஸ்பிரஸிடம் பேசிய பிகார் பாஜக தலைவர்கள், கட்சியைப் பொருத்தவரையில் இது “பொன் குடத்திற்குப் பொட்டு வைப்பது போன்றது“ என்றும் இது பிகாரில் பாஜகவின் தார்மீக தைரியத்தை அதிகரிப்பது மட்டுமின்றி தேசிய அளவில் “இந்தியா” கூட்டணியைப் பலவீனப்படுத்தும் என்றும் தெரிவித்தனர்.

முதல்வர் பதவியை ராஜினாமா செய்தால் மட்டுமே பாஜக நிதிஷ் குமாரை தன்னுடன் சேர்த்துக்கொள்ளும் என்று பெயர் வெளியிடப்படக்கூடாது என்ற நிபந்தைனையின் பேரில் “தி இந்து” நாளேட்டிடம் பேசிய பிகார் பாஜக தலைவர்கள் தெரிவித்தனர். அத்தகைய சூழ்நிலையில் சட்டப் பேரவையைக் கலைப்பதும் ஒரு மாற்று வழியாக இருக்கக் கூடும்.

குழந்தைகள், பெரியவர்களின் விவகாரங்களில் இருந்து விலகியே இருக்க வேண்டும் என்று லாலு யாதவின் மகள் ரோகிணி ஆச்சார்யாவுக்கு கே.சி.தியாகி அறிவுரை கூறியுள்ளார்.

**நிதிஷ்குமார் 5-வது முறையாக அணி மாற தயாராகிறாரா?**

நிதிஷ்குமார் மீண்டும் பாஜகவுடன் கைகோர்த்தால் அது 2005 நவம்பருக்கு பிறகு முதலமைச்சராக அவர் செய்யும் ஐந்தாவது ‘யு டர்ன்’ ஆக இருக்கும். 2022 ஆகஸ்ட் மாதம்தான் நிதிஷ் குமார் பாஜகவிடமிருந்து விலகி லாலு பிரசாத் யாதேவின் ஆர்ஜேடியுடன் கைகோர்த்தார்.

நிதிஷ் குமார் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைவதாக ஊகங்கள் குறித்து இந்தியன் எக்ஸ்பிரஸிடம் பேசிய ஐக்கிய தனதா தளத்தின் தேசிய செய்தித் தொடர்பாளர் கே.சி. தியாகி, “எனக்கு அது பற்றி எதுவும் தெரியாது. ஆனால் இந்தியா கூட்டணியில் நடப்பது எதுவும் சரியில்லை என்று என்னால் சொல்ல முடியும். பிராந்தியக் கட்சிகள் வலுவாக உள்ள இடங்களில் காங்கிரஸ் சீட்டுகளை கேட்கக் கூடாது,” என்று தெரிவித்தார்.

புத்தாண்டு தினம் மற்றும் முன்னாள் முதல்வரும், லாலு பிரசாத் யாதவின் மனைவியுமான ராப்ரி தேவியின் பிறந்த



நாளுமான ஜனவரி 1ஆம் தேதி, லாலுவுக்கும், நிதிஷுக்கும் இடையே அவ்வளவாகப் பேச்சு வார்த்தை இல்லாதது போலவே காணப்பட்டது.

முன்னதாக டிசம்பர் 29ஆம் தேதி டெல்லியில் நடந்த ஐக்கிய தனதா தள கூட்டத்தில் கட்சியின் தலைவர் லலன் சிங் ராஜினாமா செய்தார், பின்னர் நிதிஷ் குமார் கட்சித் தலைவரானார். அப்போது பாஜக தலைவர் சுஷீல் மோதி, “லாலுவுடன் நெருக்கமான காரணத்தால் லலன் சிங் நீக்கப்பட்டுள்ளார்” என்று கூறியிருந்தார்.

வாரிசு அரசியல் குறித்து நிதிஷ் குமார் தெரிவித்த கருத்துக்குப் பிறகு ஆர்ஜேடி தலைவர் லாலு பிரசாத் யாதவின் மகள் ரோகிணி ஆச்சார்யா ட்வீட் மூலம் கிண்டல் செய்தார். பின்னர் அவர் அந்த ட்வீட்டை நீக்கிய போதிலும், இது நிதிஷ் குமாரை பற்றியதுதான் என்று நம்பப்படுகிறது.

எந்தவொரு தலைவனும் தான் ஆசைப்பட்டால் மட்டுமே தன் குழந்தைகளை அரசியலில் முன்னேற்றிவிட முடியாது என்றும், அப்படிப்பட்ட ஒரு தலைவரை பொது மக்கள்தான் முன்னேறச் செய்கிறார்கள் என்றும் ராஷ்ட்ரிய ஜனதா தளம் கூறியுள்ளது.

இந்த சர்ச்சைகளுக்கு மத்தியில் பிகார் பாஜக தலைவர் சாம்ராட் சௌத்ரி வியாழக்கிழமை மாலை டெல்லி சென்றடைந்தார். பிகார் பாஜக மூத்த தலைவர்களின் கூட்டம் டெல்லியில் நடைபெற்றது என்று செய்தி முகமை ஏஎன்ஐ தெரிவிக்கிறது.

“2024 மக்களவைத் தேர்தலில் எப்படிப் போட்டியிடுவது என்பது பற்றி மதிப்பாய்வு செய்யப்பட்டது,” என்று அமித் ஷாவை சந்தித்த பிறகு சாம்ராட் சௌத்ரி கூறினார்.

முன்னதாக பிகார் அரசின் முக்கிய கூட்டணிக் கட்சியான ராஷ்ட்ரிய ஜனதா தளத்தின் தலைவர் லாலு பிரசாத் யாதவ் மற்றும் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் ஆகியோர் ராஷ்ட்ரிய ஜனதா தளம் தலைவர்கள் மற்றும் தொண்டர்களை தங்கள் இல்லத்திற்கு அழைத்து அவர்களைச் சந்தித்தனர்.

இருப்பினும், இதுபோன்ற சந்திப்புகள் அடிக்கடி நடக்கும் ஒன்றுதான் என்றும் பிகார் அரசுக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை, நிதிஷ் அரசு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்றும் ராஷ்ட்ரிய ஜனதா தளம் செய்தித் தொடர்பாளர் சக்தி சிங் யாதவ் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

பிகார் அரசில் நிலவுவதாகச் சொல்லப்படும் மோதல் குறித்து கருத்து தெரிவித்த மத்திய அமைச்சரும், பா.ஜ.க மூத்த தலைவருமான கிரிராஜ் சிங், “நான் என் தாய்வீட்டிற்குச் சென்றுவிடுவேன் என்று நிதிஷ் குமார் லாலு யாதவை அடிக்கடி மிரட்டி வருகிறார். ஆனால் தாய் வீட்டின் கதவு அவருக்கு மூடப்பட்டுள்ளது,” என்று குறிப்பிட்டார்.

நிதிஷ் மீண்டும் பாஜகவுடன் கைகோர்ப்பது பற்றியே கிரிராஜ் சிங்கின் இந்தப் பேச்சு உள்ளதாக நம்பப்படுகிறது

பீகாரில் நிதிஷ் குமாருக்கும் பாஜகவுக்கும் இடையே நெருக்கம் அதிகரித்து வருவதாக செய்திகள் வெளியாகி வரும் நிலையில், பாஜக எம்பி கிரிராஜ் சிங், நிலைமையை தங்கள் கட்சி கவனித்து வருவதாக தெரிவித்துள்ளார்.

லோக் ஜனசக்தி கட்சி (பாஸ்வான்) தலைவர் சிராக் பாஸ்வானுக்கும், பாஜக தலைவர் ஜேபி நட்டாவுக்கும் இடையே சனிக்கிழமை காலை சந்திப்பு நடைபெற்றது.

கிரிராஜ் சிங் கூறுகையில், “லாலு பிரசாத் யாதவும், காங்கிரசும் மகா கூட்டணியில் இடம் பெற்றுள்ள நிலையில், நிதிஷ் குமார் தற்போது முதல்வராக உள்ளார். பாரதிய ஜனதா கட்சி வலுவான அரசியல் கட்சி. மாநிலத்தில் நிலைமையை உன்னிப்பாக கவனித்து வருகிறது. கட்சியின் அரசியல் தலைமை சிந்திக்கும். அடுத்தடுத்து என்ன நடக்கிறது என்பதைப் பொருத்து என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது தீர்மானிக்கப்படும்,” என்றார்.

(16ஆம் பக்கம் பார்க்க)



# ஹூதி தாக்குதலில் பற்றி எரிந்த கப்பல்: 22 இந்தியர்கள் என்ன ஆயினர்?




ஏமனை தளமாகக் கொண்ட ஈரான் ஆதரவு இயக்கமான ஹூத்தி கிளர்ச்சிக்குழு, “அமெரிக்க - பிரிட்டன் தாக்குதலுக்கு” பதிலடி கொடுக்கும் விதமாக வெள்ளிக்கிழமையன்று மார்லின் லுவாண்டா கப்பலை குறிவைத்து தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த கப்பலை மீட்கும் முயற்சியில் இந்திய கடற்படையின் கப்பல் உள்ளிட்ட பிற நாடுகளின் கப்பல்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

**அமெரிக்க, பிரிட்டன் தாக்குதலுக்கு பதிலடி**

செங்கடல் பகுதியில் செல்லும் கப்பல்கள் மீது தொடர் தாக்குதல் நடத்தி வரும் ஹூத்தி குழுவின் நடவடிக்கைகளுக்கு எதிராக சமீபத்தில் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் இணைந்து வான்வழி தாக்குதலை நடத்தினர்.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஏடன் வளைகுடா பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த மார்லின் லுவாண்டா கப்பல் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது ஹூத்தி கிளர்ச்சிக்குழு.

தற்போது பிரான்ஸ், இந்தியா மற்றும் அமெரிக்க கடற்படை கப்பல்கள் அந்த கப்பலுக்கு உதவிக்கரம் நீட்டியுள்ளன.

**கப்பல் மீது தாக்குதல்**

தற்போது ஹூத்திக்கள் தாக்குதல் நடத்தியுள்ள மார்லின் லுவாண்டா கப்பலை இயக்குவது ஓஷியோனிக்ஸ் சர்வீசஸ் லிமிடெட் (Oceonix Services Ltd) என்ற இங்கிலாந்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும்.

இந்த டேங்கர் கப்பலானது மார்ஷல் தீவுகளின் கொடியின் கீழ், டிராஃபிகுரா (Trafigura) என்ற பன்னாட்டு வர்த்தக நிறுவனத்தின் சார்பில் இயக்கப்படுகிறது.

சனிக்கிழமையன்று (27.1.2024) கிடைத்த புதிய தகவலின்படி, கப்பலின் அனைத்து பணியாளர்களும் பாதுகாப்பாக இருப்பதாகவும், டேங்கரில் ஏற்பட்ட தீ அணைக்கப்பட்டுவிட்டதாகவும் கூறியுள்ளது டிராஃபிகுரா நிறுவனம். கப்பல் தற்போது பாதுகாப்பான துறைமுகத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருப்பதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

**ஹூதி பொறுப்பேற்பு**

இது செங்கடல் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஹூத்திக்களால் வணிகக் கப்பல் மீது நடத்தப்பட்ட சமீபத்திய தாக்குதலாகும். இஸ்ரேல் ஹமாஸுக்கு எதிராக தாக்குதல் நடத்தி வரும் நிலையில், காசாவில் உள்ள பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக இந்த பகுதியில் வரும் கப்பல்கள் மீது தாக்குதல்கள் நடத்தி வருவதாக ஹூத்தி அமைப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து ஹூத்தி செய்தித் தொடர்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மார்லின் லுவாண்டா ஒரு பிரிட்டிஷ் கப்பல் என்றும், “எங்கள் நாட்டிற்கு எதிரான அமெரிக்க - பிரிட்டிஷ் தாக்குதலுக்கு” பதிலளிக்கும் வகையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள இங்கிலாந்து அரசு, வணிக கப்பல் போக்குவரத்து மீதான தாக்குதல்கள் “முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதவை” என்றும், பிரிட்டனும் அதன் நட்பு நாடுகளும் “இதற்கு தகுந்த முறையில் பதிலளிக்கும்” என்றும் தெரிவித்துள்ளது.

நவம்பர் மாதத்திலிருந்து, உலகின் முக்கியமான கடல் வழித்தடங்களில் ஒன்றான செங்கடல் வழியாகப் பயணிக்கும் வணிகக் கப்பல்கள் மீது ஹூதிகள் டசின்கணக்கான தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதனால் செங்கடல் பகுதியில் வணிக கப்பல்களின் போக்குவரத்துக்கு பாதிக்கப்பட்டுள்ளது.

**தாக்குதல் எங்கே நடந்தது?**

ஏடனுக்கு தென்கிழக்கே திசையில் 60 கடல் மைல் தொலைவில் இந்த தாக்குதல் நடந்ததாக இங்கிலாந்து கடல்சார் வர்த்தக நடவடிக்கைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும் மற்ற கப்பல்கள் எச்சரிக்கையுடன் செல்லுமாறும், சந்தேகத்திற்கிடமான செயல்கள் ஏதேனும் பார்த்தால் உடனே தகவல் தருமாறும் எச்சரித்துள்ளது.

இதற்கு பின்னர், சனிக்கிழமையன்று உள்ளூர் நேரப்படி 03:45 மணிக்கு அமெரிக்க படை, “ செங்கடலை குறிவைத்து ஏவத் தயாராக இருந்த கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகளுக்கு எதிராக” ஏவுகணை தாக்குதல்களை நடத்தியுள்ளதாக அமெரிக்க மத்திய கமாண்ட் தெரிவித்துள்ளது. அவர்கள் “தற்காப்புக்காக அந்த ஏவுகணைகளை அழித்துவிட்டதாக” சென்ட்காம் தெரிவித்துள்ளது.

**இந்திய கடற்படை விரைவு**

இந்தத் தாக்குதலுக்குப் பிறகு, ஏடன் வளைகுடாவில் நிலைநிறுத்தப்பட்டுள்ள இந்தியக் கடற்படையின் போர்க்கப்பலான ஐஎன்எஸ் விசாகப்பட்டினம் உடனடி நடவடிக்கையில் இறங்கியது.


தாக்குதல் நடத்தப்பட்ட கப்பலில் இருந்து உதவிக்கான அழைப்பு வந்ததையடுத்து, இந்திய கடற்படையின் ஏவுகணை அழிப்பு கப்பலான ஐஎன்எஸ் விசாகப்பட்டினம் உதவிக்கு அனுப்பப்பட்டதாக இந்திய கடற்படை சமூக வலைதள பக்கத்தில் தெரிவித்துள்ளது.

இந்தக் கப்பலில் 22 இந்தியர்களைத் தவிர, வங்கதேசத்தைச் சேர்ந்த பணியாளர் ஒருவரும் இருக்கிறார்.

வெள்ளிக்கிழமை இரவு இந்த தாக்குதல் நடைபெற்றுள்ளது. அதனை தொடர்ந்து உடனடியாக விரைந்த ஐஎன்எஸ் விசாகப்பட்டினம் கப்பல் குழுவின் முயற்சியால் கப்பலில் பற்றியிருந்த தீ அணைக்கப்பட்டு விட்டதாக இந்திய கடற்படை தனது சமூக வலைதள பக்கத்தில் தெரிவித்துள்ளது.

மேலும் வணிக கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்குவதில் உறுதியாகவும், ஈடுபாட்டோடும் இந்திய கடற்படை தொடர்ந்து செயல்படும் என்றும், கடல் பரப்பில் உயிர்களை காப்பதற்கான உறுதியை கொண்டுள்ளதாகவும் இந்திய கடற்படை தனது பதிவில் தெரிவித்துள்ளது. •



# பீகார் முதலமைச்சர் நிதிஷ் குமார்...

நிதிஷ்குமார் தனது அரசியல் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளலாம் என்று பீகாரில் இருந்து செய்திகள் வருகின்றன. எனினும், இது தொடர்பாக முறையான அல்லது தெளிவான அறிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை.

லாலு பிரசாத் யாதவும், கிரிராஜ் சிங்கும் சமீபத்தில் ஒரு விமானப் பயணத்தின்போது சந்தித்தனர். லாலு பிரசாத் யாதவ் தனது மகன் தேஜஸ்வி யாதவை பிகார் முதல்வராக ஆக்க விரும்புகிறார் என்று இந்த சந்திப்புக்குப் பிறகு கிரிராஜ் சிங் கூறியிருந்தார்.



**பாஜக வியூகம்**

பிகார் பாஜகவின் ட்வீட்களும், கிரிராஜ் சிங்கின் அறிக்கைகளும் மற்றொரு குறிப்பைத் தருகின்றன. அதாவது ஐக்கிய ஜனதா தளம் பாஜகவுடன் இல்லாவிட்டாலும், ராஷ்ட்ரிய ஜனதா தளமும் ஐக்கிய ஜனதா தளமும் தனித்தனியாக தேர்தலில் போட்டியிட்டால், வரவிருக்கும் மக்களவைத் தேர்தலில் பாஜக அதிக பலன் அடையும் என்று நிபுணர்கள் கருதுகின்றனர்.

கடந்த 2014 மக்களவை தேர்தலிலும் இதேதான் நடந்தது. அப்போது பாஜகவும் ஐக்கிய ஜனதா தளமும் தனித்தனியாக இருந்தன. அந்தத் தேர்தலில் பாஜகவுக்கு 22 இடங்கள் கிடைத்தன. அதேநேரம் அதன் கூட்டணிக் கட்சிகளையும் சேர்த்தால் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு 31 இடங்கள் கிடைத்தன.

இதில் எல்ஜேபிக்கு 6 இடங்களும், உபேந்திர குஷ்வாஹாவின் ராஷ்ட்ரிய லோக் சமதா கட்சிக்கு 3 இடங்களும் கிடைத்தன. கடந்த 2019 மக்களவைத் தேர்தலில் பிகாரில் உள்ள 40 மக்கள வைத் தொகுதிகளில் 39 இடங்களில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு வெற்றி கிடைத்தது. ஆனால் இவற்றில் 17 இடங் களை பாஜகவும், 16 இடங்களை ஐக்கிய ஜனதா தளம், 6 இடங்களை லோக் ஜனசக்தி கட்சியும் கைப்பற்றின.



பின்னர் 2022 ஆகஸ்டில் ஐக்கிய ஜனதா தளம் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து பிரிந்தது.

அதே நேரத்தில் பிகார் மாநிலத்தில் மதுவிலக்கு தொடர்பாக நிதிஷ்குமார் அரசை பாஜக மீண்டும் ஒருமுறை சாடியுள்ளது. அதாவது பிகாரில் மகா கூட்டணி ஆட்சியில் குழப்பம் நிலவி வருவதாகச் சொல்லப்படும் நிலையில், நிதிஷ் மீது பாஜக பகிரங்கமாக மென்மையாக நடந்து கொள்வதைப் பார்க்க முடியவில்லை. அதே நேரம் ஆட்சியில் இழுபறி இருப்பதை மகா கூட்டணி தலைவர்களும் ஏற்றுக் கொள்வதில்லை.

மாநில அரசில் எல்லாம் நன்றாகவே இருக்கிறது என்று மாநில நிதி அமைச்சரும், ஐக்கிய ஜனதா தளம் எம்.எல்.ஏ.வுமான விஜய் சௌத்ரி செய்தியாளர்களிடம் கூறியுள்ளார். பிகார் பாஜக தலைவர்கள் அமித்ஷாவை சந்தித்தது பற்றிய கேள்விக்குப் பதிலளித்த அவர் சந்திப்புகளை நடத்துவது கட்சிகளின் வேலை என்று கூறினார்.

**ராகுலின் யாத்திரை இன்று பீகார் சென்றடையும்**

முழு வலுவுடன் பாஜகவை எதிர்கொள்ளும் வகையில் காங்கிரஸ் கட்சி, தன் பிராந்திய கூட்டணிக் கட்சிகளை அந்தந்த மாநிலங்களில் தேர்தலில் போட்டியிட அனுமதிக்க வேண்டும் என்று சில வல்லுநர்கள் அறிவுறுத்துகின்றனர்.

அதே நேரத்தில் பாஜகவுடன் நேரடிப் போட்டி நிலவும் மத்திய பிரதேசம், ராஜஸ்தான், குஜராத், சத்தீஸ்கர், உத்தராகண்ட் போன்ற மாநிலங்களில் காங்கிரஸ் முழு கவனம் செலுத்த வேண்டும் என்றும் அறிவுரை வழங்கப்படுகிறது.

பிகார் அரசியலில் நிலவும் பரபரப்பான சூழலுக்கு மத்தியில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியின் நீதி யாத்திரை இன்று பிகாரில் நுழைய உள்ளது.

அதேநேரம் இன்றும் நாளையும் “வேலைக்கு நிலம்” விவகாரத்தின் விசாரணைக்காக டெல்லி வருமாறு லாலு பிரசாத் யாதவுக்கும், தேஜஸ்வி யாதவுக்கும் அமலாக்க இயக்குநரகம் சம்மன் அனுப்பியுள்ளது என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தகைய சூழ்நிலையில் பிகாரில் எதிர்க்கட்சிகளின் கூட்டணி எந்த திசையில் செல்கிறது என்பதை ராகுல் காந்தியின் பேரணி தொடர்பான ஐக்கிய ஜனதா தளம்வின் நிலைப்பாடு தீர்மானிக்கும்.

